காஞ்சி

ஆசிரியர் : அண்ணாதுரை

விலை 20 காசு

கதிரவன்:

நான் நினைத்தேன்; அது நடந்துவிட்டது!

நான் எதை நினைக்கக்கூடாது என்று நினைத்தேனே அதையே நினைத்தேன்; எது நடக்கக்கூடாது என்று எச்சரிக்கையுடன் இருந்தேனே அதுவே நடந்துவிட்டது.

எனக்கென்னவோ, 'அது' அவ்வளவு முக்கியமான விஷயம் என்று எடுத்துக்கொள்ளவும் முடியவில்லை; சாதாரண விஷயம் என்று ஒதுக்கித் தள்ளிவிடவும் முடியவில்லை.

கௌரி...! என் மனைவி; என் உயிர்...!

சினிமா கொட்டகையில் நடந்ததை மறந்துவிடும்படி அவளுக்கு எவ்வளவோ சொல்லிக்கொண்டு வந்தேன், வழி முழுவதும்! எங்களுடன் சினிமாவுக்கு வந்த அல்லியும் எவ்வளவோ கூறினாள். ஆனால், அவளோ அதை மறப்பதற்குப் பதிலாக பெரிதுபடுத்திக்கொண்டாள். அவள் முகமோ வெய்யிலில் கிள்ளிப்போட்ட தாமரைப் பூவைப்போல வாடிவிட்டது!

கௌரியைப்பற்றி நினைத்தாலே இதயம் பூரித்துப் போகும். ஒரு மாகாவியத்தின் கதாநாயகிக்கு உரிய எல்லாவித நற்பண்புகளும் குடும்பப்பாங்கும் அவளிடம் பூரணமாக நிறைந்து விளங்கின.

ஒரு எழுத்தாளனை மணந்துகொள்ளும் ஒரு பெண்ணுக்கு நல்ல குணங்கள் மட்டும் இருந்தால் போதா. அவனுடன் ஒவ்வொருகணமும் ஒத்துழைக்கும் கலையுள்ளமும் ரசிகத்தன்மையும் வேண்டும். அத்தனையும் அமையப்பெற்ற அருங்குணவதி, கௌரி! நான், எழுதவேண்டிய கதைகளைப்பற்றிச் சொல்லும் போதும் கதைகளை எழுதும்போதும் என்னுடன் பெரிதும் ஒத்துழைப்பாள்; ஏனைய சமயங்களில் என் மனப்போகுபடி இணங்கும் விட்டுக்கொடுத்தும் நடப்பாள்.

அவள் என்னை ஒரு குழந்தைபோல பார்த்துக் கொள்வாள்; நான் அவளை ஒரு மலர்ந்த அழகிய பூவைப்போல வைத்திருந்தேன். அல்லியோ எங்கள் இருவரையும் தெய்வமாகமதித்து எங்களைப்போற்றி வந்தாள்.

அல்லி......எதிர்வீட்டுப் பெண். மின்சார இலாகாவில் வேலை செய்யும் ஒரு வயோதிக வங்காளக்காரரின் மகள். இருபது ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் வாழ்ந்துவரும் அந்த வங்காளிக்குத் தமிழ்ச் சமுதாயமும் தமிழ் பண்பாடும் பிடித்துப்போய்விட்டன. தம் மகளுக்கு அல்லி என்று பெயர் வைத்து அவளை ஓர் தமிழ்ப் பெண்ணாகவே வளர்த்துத் தமிழ் படிக்க வைத்தார். அவள் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தாள். நல்ல சிகப்பு நிறம். வங்காளப் பெண்ணுக்கே உரிய மென்மை குலவும் அழகிய வாளிப்பான உடற்கட்டு......அழகின் தேவதை, அவள்.

கடந்த மூன்று ஆண்டுகளில் அவளும் கௌரியும் உயிர்க்கு உயிராகப் பழகிவிட்டார்கள். அல்லி இல்லாமல் கௌரிக்கு எந்தப் பொழுதுபோக்கும் இல்லை. ஆகவே, அவளும் சினிமாவுக்கு வந்திருந்தாள்.

நாங்கள் மூவரும் சினிமாவுக்குப் புறப்பட்டபோது எவ்வளவோ மகிழ்ச்சியுடன் புறப்பட்டோம். பாதிபடம் பார்க்கும்வரைகூட மகிழ்ச்சியுடன் தான் இருந்தோம். ஆனால்......

படத்தில் இடைவேளை வந்தது; எங்கள் இதயத்திலும் அந்தப் பேரிடி விழுந்தது.

கௌரி மனம் கலங்கிவிட்டாள். உண்மையைச் சொல்லப்போனால் நானும்தான் ஒருகணம் என்னவோ போல் ஆகிவிட்டேன். திருமணமான கடந்த ஐந்து ஆண்டுகளாக இல்லாத ஓர் எண்ணம் பளிச்சென்று என் இதயத்தில் ஊடுருவிப் பாய்ந்தது.

எழுத்தாளனாக இருந்தால் என்ன? மனிதன் மனிதன்தானே? மனித மனத்தைப்போல ஒரு கேவலமான பொருள் வேறு எதுவுமே இருக்கமுடியாது. உலகத்திலேயே மிகமிகப் புனிதமான எண்ணங்களும் அழகழகான கற்பனைகளும் அரிதினும் அரிய சிந்தனைகளும் தோன்றுவது மனித மனத்தில்தான்! அதே சமயத்தில் எத்தனை பெரிய அறிவாளியாக இருந்தாலும் எவ்வளவு பெரிய மேதையாக இருந்தாலும், மிகமிகக் கேவலமான எண்ணங்களும் விரும்பத்தகாத அநாகரிகக் கற்பனைகளும் வெறுத்தற்குரிய சிந்தனைகளும் தோன்றுவதும் இதே மனித மனத்தில்தான்! இதனை யாருமே மறுக்க முடியாது!

என்ன செய்வது...? நான், ஒரேகணத்தில் என் மனதில் ஏற்பட்ட அந்த வடுவைத் தூக்கி அப்பால் எறிந்துவிட்டு என்னை ஆறுதல் படுத்திக்கொண்டேன்.

அல்லி......கல்லூரியில் படிப்பவள் அல்லவா? அவளும் மிகுந்த திறமையுடன் தன்னை அடக்கிக் கொண்டாள். இருந்தாலும் அவளுடைய மன உணர்ச்சிகளை நான் புரிந்துகொண்டேன்.

சினிமா கொட்டகையில்......

எதிரில் யாருடைய தலையோ மறைத்ததால், அல்லி என் வலப்பக்கத்திலும் கௌரி என் இடப்பக்கத்திலும் படம் பார்ப்பதற்கு வசதியாக அமர்ந்திருந்தார்கள். இடைவேளையின்போது எங்களுக்குப் பின்புறத்தில் நிகழ்ந்த பேச்சினை நாங்கள் மூவருமே அறிவோம். ஆனால், ஒருவர்க்கு ஒருவர் காட்டிக்கொள்ளாமல் ஒன்றுந் தெரியாதவர்களைப்போல அமர்ந்திருந்தோம்; எனினும் எங்கள் மூவருடைய உள்ளங்களும் கொந்தளித்துக் கொண்டிருந்தன.

இடைவேளைக்குப் பிறகு விளக்குகள் அணைக்கப்பட்டதும் கௌரியின் விம்மல் அதிகமாகிவிட்டது. சற்றுப் பொறுத்து நான் அல்லியிடம் சொல்லவே, அவள் எழுந்து சென்று கௌரியின் பக்கத்தில் அமர்ந்துகொண்டு, "என்ன அக்கா! குழந்தைமாதிரி இதற்குப்போய் இப்படி வருத்தப்படுகிறீர்களே" என்று ஆறுதல் கூறினாள். கௌரி மிகுந்த சிரமத்துடன் பேசாமல் இருந்தாள். ஆனாலும், அவள் இதயத்தில்

புயல் ஆரம்பமாகிவிட்டது என்பதை என் இதயம் நன்ருக உணர்ந்தது.

படம் முடிந்து வீடு திரும்பியபோது, அல்லியின் வீடு வந்ததும் அவள் ஒன்றும் பேசாமல் சற்று தலையை அசைத்து கண்ணுலேயே எங்களிடம் விடை பெற்றுக் கொண்டு போய்விட்டாள்.

நானும் கௌரியும் வீட்டிற்குள் நுழைந்ததும் எது நடக்கக்கூடாது என்று நான் வழி முழுவதும் நினைத்துக்கொண்டு வந்தேனே அதுதான் நடந்தது.

அறைக்குள் வந்ததும் கௌரி, என்னை அணைத்துக்கொண்டு 'ஓ'வென்று கதறிவிட்டாள். எந்த நேரத்திலும் அமைதியாக இருக்கும் அவள் என்னை அணைத்துக்கொண்டு குமுறிக்குமுறி அழுதபோது என்னையறியாமலேயே என் கண்களிலும் நீர் நிறைந்து விட்டது.

"அழாதீர்கள், அத்தான்! நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? அழவேண்டியவள், நான்......" என்று என் கண்களைத் துடைத்த அவள், "இத்தனை நாட்களாக என் தவறு எனக்குத் தெரியாமலேயே நான் இருந்து விட்டேன். என் சுயநலத்திற்காக, உண்மையிலேயே குழந்தையைப் போன்ற உங்களை நான் ஏமாற்றி விட்டிருக்கிறேன். அது இன்று எனக்கே நன்ருகத் தெரிகிறது" என்று என் முகத்தோடு முகம் பொருத்திக்கொண்டு வெதும்பினுள்.

அந்த நிலையில் அவளை ஆறுதல்படுத்த முடியாது என்றெண்ணி, அவளை முகம் கைகால்களை அலம்பச் செய்து குளிர்ந்த நீரைக் குடிப்பிக்க வைத்துக் கட்டிலில் படுக்கவைத்தேன். அவள் தூங்கி எழுந்தால் சரியாகப் போய்விடும் என்று எண்ணினேன்.

ஒருவேளை, அவள் சரியாகப் போய்விடலாம். ஆனுல், நான் ..? என் மனம்...?

சினிமா கொட்டகையில் நிகழ்ந்த அந்த நிகழ்ச்சி என்னை என்னென்னவோ நினைக்க வைத்துவிட்டது. ஒன்று மட்டும் நன்ருகப் புரிந்தது. கௌரிக்கு வேதனையை அளித்த அந்தப் பேச்சு எனக்குக் கலக்கத்தையும் சபலத்தையும் உண்டாக்கியது. அல்லிக்கோ அது பெருமகிழ்ச்சியை அளித்திருக்க வேண்டும். அதனுல்தான், அவள் உணர்ச்சிப்பெருக்கால் அது சினிமா கொட்டகை என்பதையும் மறந்து விட்டாள். அந்த நிகழ்ச்சியையும் அல்லியின் துணிவையும் வெளியில் சொல்லவே வெட்கமாக இருக்கிறது.

ஒரு நிரபராதியின் மீது வீண்பழி சுமத்தி திரும்பத் திரும்ப நாம் அவனைக் குற்றவாளி என்று கூறினுல், கடைசியில் அவன் குற்றம் செய்யவே தலைப்பட்டுவிடுகிருன். அதைப்போலவே, நான் வீட்டிற்கு வந்த பிறகு திரும்பத் திரும்ப கௌரி கூறியதைக் கேட்கக் கேட்க, களங்கமற்ற என் தூய நெஞ்சிலும் என்றுமே தோன்ருத ஒரு சிறு நெருப்புப்பொறி விழுந்து ஒட்டிக் கொண்டது.

❋

அல்லி:

என் இதயத்தில் அந்த நெருப்புப்பொறி என்ருே விழுந்துவிட்டது. இன்று, அது பெருநெருப்பாக மாறி என் நெஞ்சத்தில் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கிறது.

இந்த நெருப்பு இப்படியே சுடர்விட்டு எரிந்து என் இதயத்தையே பொசுக்கிவிட்டாலும் கவலையில்லை..... அது எரிவதால் ஏற்படும் ஒருவகையான இன்பக் குளுமை உடலில் பரவுகிறதே, அதற்காகவாவது இதயத்தில் அந்த நெருப்பு எப்போதும் எரிந்துகொண்டே இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அன்று நாங்கள் மூவரும் மகிழ்ச்சியுடன் சினிமா பார்த்துக்கொண்டிருந்தோம். இடைவேளையின்போது கொட்டகையில் விளக்கு போட்டதும், எங்களுக்குப் பின் வரிசையில் அமர்ந்திருந்த இளம் தம்பதிகள் கிசுகிசுத்த குரலில் எங்களைப்பற்றிப் பேசிக்கொண்டது எங்கள் மூவர் காதிலும் தெளிவாக விழுந்தது. ஆனுல், அதைக் கேட்காதவர்கள் மாதிரி ஒருவர்க்கொருவர் பாவனை செய்துகொண்டோம். கௌரி அக்கா மட்டும் மனம் தாங்கமுடியாமல் வெளிப்படையாகக் குமுறிவிட்டார்கள்.

ஒருவர்மீது எவ்வளவுதான் அன்பும் மதிப்பும் பாசமும் வைத்திருந்தாலும், சில சமயங்களில் சுயநலத்தின் விளைவால் நாம் எல்லாவற்றையும் மறந்து அந்த ஈடு இணையற்ற அன்புக்கும் நட்புக்கும் பாசத்திற்கும் சமாதி கட்டிவிடத்தான் செய்கிருேம்.

அந்தத் தம்பதிகளின் பேச்சைக் கேட்டு கௌரி அக்காவின் இதயம் எப்படி வேதனைப்பட்டிருக்கும் என்பதை நான் அறிவேன். அவர்களுடைய அந்த நேரத்து நிலைக்காக நான் மிகவும் மனம் இரங்கி வருத்தப்பட்டேன். ஆனுல், அந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் மீறி அந்தத் தம்பதிகளுடைய பேச்சின் ஒரு பாதி எனக்குத் தேனுக இனித்ததே......அதனை நான் என்னவென்று சொல்வது?

சினிமா கொட்டகையில் விளக்குகள் அணைந்ததும் படம் தொடர்ந்தது. அதன் பிறகு எங்கள் மூவரில் யாருமே படம் பார்க்கவில்லை.

எப்போதோ ஒரு நாள் என் இதயத்தில் விழுந்த நெருப்புப் பொறி, அந்தத் தம்பதிகளின் பேச்சால் திடீரென்று தீப்பிடித்து என் உடலைத் தகித்து என்னை வெறிகொள்ளச் செய்துவிட்டது. 'அத்தான்' என்று கூவிக்கொண்டே கதிரவனை அப்படியே இறுக அணைத்துக்கொள்ளவேண்டும்போல் என் மனம் குறுகுறுத்தது. என் செயலை என்னுலேயே கட்டுப்படுத்த முடியாமல் என் உடல் அணு ஒவ்வொன்றும் ஏதோ ஒரு செயலைச் செய்யத் துடித்தன. உச்சிமுதல் உள்ளங்கால்வரையுள்ள நரம்புக் குருத்துக்களில் இனந்தெரியாத பரபரப்பு ஊர்ந்து அடிக்கடி நெஞ்சைக் கவ்விக் கொண்டது. அதற்குமுன்பு நான் எப்போதுமே அடைந்திராத உணர்ச்சியும் பதற்றமும் என்னை ஆட்கொண்டன. இருளில் தெரியாதவளைப்போல நாற்காலியின் கைப்பிடியின்மேல் கையைவைக்கும் சாக்கில் கையை அவர் தொடைமீது வைத்தேன். என் செயலை வரவேற்கும் தோரணையில் அவர் சற்று நேரம்வரை பேசாமல் இருக்கவே, என் கைவிரல்கள் அவர் முழங்காலை மெல்ல வருட ஆரம்பித்தன. அவர் அதைத் தெரிந்துகொள்ளாதவரைப்போல், 'அக்கா அழுகிருள் ...அவளைத்தேற்று' என்று சொல்லி என்னைக் கௌரியிடம் அனுப்பிவிட்டார். பிறகுதான் பயந்தேன்...என்னுடைய துணிவான அந்தச் செய்கையால் அவர் என்னை வெறுத்துவிடுவாரோ...அல்லது அக்காளிடம் சொல்லிவிடுவாரோ என்று! ஆனுல், அப்படியெல்லாம் செய்து அவர் என்னை சங்கடப்படுத்தவில்லை.

கௌரி அக்கா எனக்கு முதலில் எப்படி அறிமுகமானுர்கள் என்பதை மறந்துவிட்டேன். ஆனுல், அந்த அத்தானுடைய அறிமுகம் இன்னும் பசுமையாகவே நினைவிருக்கிறது.

ஒரு நாள் அக்காளிடம் வாங்கிவந்த கதைப் புத்தகத்தைத் திருப்பிக்கொடுக்கச் சென்ற நான், ஒருமணி நேரமாக ஓயாமல் அதன் கதாசிரியரைப் புகழ்ந்து கொண்டிருந்தேன்.

கடைசியில், "கதைஎழுதுபவர்கள் எப்படி அக்கா இருப்பார்கள்? சின்ன வயசு முதலே எழுத்தாளர்களைப் பார்க்கவேண்டும்...அவர்களோடு பேசிப் பழகவேண்டும் என்று எனக்கு அதிக ஆசை அக்கா......?" என்றேன், அவர்களிடம்.

"ஓகோ...அப்படியா? என்னுடன் வா......இந்தக் கதையின் எழுத்தாளரை உனக்குக் காட்டுகிறேன்" என்றுகூறி என்னை தோட்டப்பக்கத்துத் தனியறைக்கு அழைத்துச்சென்று அத்தானை......அதுதான் அவரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

முதன் முதலில் அவரைப் பார்த்தபோது நான் அப்படியே பிரமித்துப்போனேன். ஆண்களில்கூட இப்படி ஓர் அழகானவர் இருக்கமுடியுமா? கெம்பீரமான தோற்றம்...! செக்கச் சிவந்த நிறம்...எடுப்பான நாசி அழகிய கண்கள்...சிவந்த உதடுகள்! பார்வையில் இதயத்தைச் சுண்டியிழுக்கும் ஒருவித காந்த சக்தி. அவருடைய அழகிய உதடுகளை, பூ பறிப்பதைப்போல நோகாமல் பறித்து அப்படியே மென்று தின்றுவிட வேண்டும்போல் தோன்றியது, எனக்கு!

அன்றுஇரவு படுக்கையில் படுத்து கண்களை மூடியதும் அவருடைய கெம்பீரமான தோற்றமும் அழகிய முகமும் என் கண் முன் வந்து நின்றன.

'ஆகா! அந்தக் கண்கள்...கன்னங்கள்.......சின்னஞ் சிறிய அழகான உதடுகள்...!'

அப்படியே எழுந்து ஓடிச்சென்று அந்த ரோஜா மொட்டு உதடுகளைப் பறித்து எடுத்துக் கொண்டுவந்து எப்போதும் நம் உள்ளங்கையிலேயே வைத்துக்கொண்டு அழகு பார்க்கவேண்டும் என்ற ஆவல் கிளர்ந்தது.

என் வாழ்க்கையில் நல்லதற்கோ......கெட்டதற்கோ தெரியவில்லை, நான் அவரைககண்ட அந்த முதல் சந்திப்பிலேயே அவருடைய அழகிய முகம் என் இதயத்தின் ஆழத்தில் பதிந்துவிட்டது.

அன்று சினிமா பார்த்துவிட்டு வந்த பிறகு, இரண்டு நாட்களாக நான் அவர்கள் வீட்டுக்குப் போகவில்லை. எப்போதும் வராத கௌரி அக்காவே எங்கள் வீட்டிற்கு வந்து என்னை அழைத்துப்போய், "எனக்கு ஒன்றும் அதைப்பற்றிக் கவலையில்லை, அல்லி! நான் அன்றைக்கு உன் நிலையை நினைத்துத்தான் நிரம்பவும் வருத்தப்பட்டேன். நீ எவ்வளவு நல்லவள் என்பது எனக்குத் தெரியாதா? அதையெல்லாம் மனசில் வைத்துக்கொண்டு வீட்டிற்கு வராமல் நின்றுவிட்டாயே..." என்று எனக்கே ஆறுதல் கூறினார்கள். நான் அப்போது அழகிய பஞ்சாபி உடையில் இருந்தேன். அவர்களுடைய களங்கமற்ற பேச்சால் என் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது.

அவர்கள் எனக்குத் தலைவாரிப் பின்னிக் கொண்டே, "நீயே சொல், அல்லி! உன் உள்ளத்தில் படுவதை நீ ஒளிக்காமல் சொல்லவேண்டும். அவர்கள் சினிமா கொட்டகையில் என்னைப்பற்றிப் பேசிக் கொண்டதில் உண்மையிருக்கிறது அல்லவா? ஒன்றும் தெரியாத அத்தானை நான் ஏமாற்றிவிட்டிருக்கிறேன் ...இல்லையா?" என்று என்னைக் கேட்டார்கள்.

'ஓரளவு உண்மைதான்' என்று நான் எப்படி அவர்களிடம் சொல்வது? சொன்னால் அவர்கள் அப்போதே இதயம்வெடித்து இறந்துவிடுவார்களே...

"சரிதான் விடுங்கள், அக்கா! யாரோ அறிவில்லாதவர்கள் எதையோ உளறினார்கள். திருப்பித் திருப்பி நீங்கள் அதையே நினைத்துக்கொண்டு......" என்று நான் மழுப்பினேன்.

என் மழுப்பலைப் புரிந்துகொண்ட அக்கா, நமட்டுச் சிரிப்புடன் என் தலையில் நிறைய ரோஜாப்பூச்சரத்தைச் சூட்டினார்கள்.

"உன்னுடைய தங்கநிறஉடலுக்கும் நீலநிற பட்டு கவுனுக்கும் பச்சை பைஜாமாவுக்கும் மெல்லிய ரோஸ் நிற மேல் அங்கிக்கும் இரட்டைப் பின்னலுக்கும் இந்த ரோஜாச் சரத்துக்கும்...ஆகா...அல்லி, நீ இந்தப் பஞ்சாபி உடையில் எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா? என் கண்ணே உனக்குப் பட்டுவிடுமடி......" என்று என் கன்னங்களைத் தம் கைகளால் வழித்து விளையாட்டாக 'நெட்டை' ஒடித்தார்கள். எனக்கு ஒரே பூரிப்பு......

அவர்கள் சமையல் செய்யச் தொடங்கியதும் நான் வழக்கம்போல் அவர்களுக்கு உதவிசெய்தேன்.

முதலில் காபிபோட்டு முடித்ததும் ஒரு குவளையில் ஊற்றிக்கொடுத்து, "அத்தானுக்கு எடுத்துக்கொண்டு போய்க்கொடு. அதிக நேரமாக எழுதிக்கொண்டிருக்கிறார். களைப்பாக இருக்கும்" என்று என்னிடம் கொடுத்துவிட்டு அவர்கள் அடுப்படிக்குப் போய்விட்டார்கள்.

நான் குதூகலத்துடன் கூடத்தை அடுத்துத் தோட்டத்துப் பக்கம் இருந்த தனி அறையை நோக்கி காபியுடன் சென்றேன். நான் உள்ளே வந்ததை அவர் கவனிக்கவில்லை. கதை எழுதுவதை நிறுத்திவிட்டு சன்னல் வழியாக தோட்டத்தில் எதையோ பார்த்துக் கொண்டிருந்தார்.

ஓசைபடாமல் காபியை மேசைமீது வைத்துவிட்டு அவர் எதைப் பார்க்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ளும் ஆவலுடன் நானும் பார்த்தேன்.

அங்கே......

மாமரத்தின் கிளையில் இரண்டு அழகான அணில்கள் காதல் களிப்புடன் ஒன்றை ஒன்று துரத்தி விளையாடிக்கொண்டிருந்தன.

நான் மேலங்கியின் முனையால் அவர் கன்னத்தில் தட்டி காப்பிக் குவளையை அவரிடம் நீட்டினேன். அவர் திடுக்கிட்டு உணர்ந்து, "ஓ நீயா...? காபியா...கொடு" என்று குவளையை வாங்கினார்.

அவர் காபியைக் குடிக்கும்போதும் அவர் கண்கள் எனக்குத் தெரியாதவண்ணம் அந்த அணில்களின் அழகு விளையாட்டின்மீதே நிலைத்திருந்தன.

எனக்கென்னவோ...நானும் அந்த அணில்களைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் எழுந்தது. அவருக்குத்

(13-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி

மலர் 1 16—5—65 இதழ் 40

தருமபுரியைக் காட்டினலும்...!

ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றிக் கொண்டவர்கள், தாம் கையாண்ட முறைகளைக் குறித்தும், அப்போது அமைந்திருந்த சூழ்நிலை குறித்தும் மறந்துவிடுவதும், தமக்கு மட்டுமே ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கும் தனித்திறமை இருப்பதாக தமக்குத்தாமே ஒரு மயக்கத்தை ஊட்டிக்கொள்வதும், மற்றவர்களும் அதனை ஒப்புக்கொண்டாகவேண்டும் என்று வலியுறுத்துவதும், இனி என்றென்றும் தம்மை ஆட்சியிலிருந்து நீக்கக்கூடியவர்கள் எவரும் எழவே முடியாது என்று இறுமாந்து கிடப்பதும், அந்த ஆணவத்தினை ஆர்ப்பரிப்பின் மூலம் கக்கிக்கொண்டிருப்பதும், இயல்பு.

ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டவர்கள், அதன் காரணமாகவே தமது வலிவினைப் பெருக்கிக்கொள்வதற்கான வசதிகளையும் வாய்ப்பினையும் பெறுவதும் இயல்பு.

ஆட்சியிலே அமர்ந்துவிட்டவர்களிடம் காணக்கிடக்கும் வலிவினைக் கண்டு மிரண்டுபோய், அவர்கள் செய்திடும் தவறுகளை எடுத்துக் கூறவும் கண்டிக்கவும் அஞ்சிக்கொண்டு அடங்கி ஒடுங்கி இருந்துவிடும் போக்கிலே, சிலகாலமல்ல — பலகாலம்—இருந்துவிடுவது, மக்களில் பெரும்பான்மையோரின் இயல்பு.

அச்சம் காரணமாக மக்கள் வாய்திறவாதிருப்பதனை, தமது ஆட்சிக்கு அந்த மக்கள் சம்மதம் தந்துவிட்டனர் என்று எண்ணிககொள்வதும், கூறிக்கொள்வதும், ஆட்சியிலுள்ளோரின் இயல்பு.

துணிந்து ஒருசிலர் போர்க்கொடி உயர்த்தி, ஆட்சியினரை எதிர்த்து நின்று, மக்களின் ஆதரவினைத் திரட்ட முடியாமற்போன காரணததால் வீழ்த்தப்பட நேரிட்டால், அது கண்டு மக்கள் மேலும் திகில்கொண்டு, இந்த ஆட்சி மிக வலிவுள்ளது, வீழ்த்தப்பட முடியாதது, இதனை எதிர்ப்பது வீண்வேலை என்று எண்ணி மனம உடைந்து போவதும் இயல்பு.

எதிர்ப்புகளை முறியடித்துவிட முடிந்ததைக் கண்டு, ஆட்சியிலுள்ளோர், தம்மை எதிர்த்திட இனி எவரும் எழ முடியாது, தமக்குள்ள வலிவின் அளவைப் புரிந்துகொண்டுவிட்டனர், எனவே இனி எதற்கும் அஞ்சாமல், விருப்பம்போல நடந்துகொள்ளலாம் என்று புதிய தெம்பு பெற்று தடம் புரண்டு செல்லவும் துணிவு பெற்றுவிடுவதும் இயல்பு

கொடுமைகளைத் தாங்கித் தாங்கிக் குமுறிக்கிடக்கும் மக்கள், மெள்ள மெள்ள; இந்த அக்ரமத்தை ஒழிததிடுவார் இல்லையா! எத்தனை காலத்துக்குத்தான் இந்த அக்ரமம் அரசோச்சி வரும்! இதற்கு ஒரு வீழ்ச்சி ஏற்படாதா? என்று முணுமுணுத்துக்கொணடிருந்தும், மீண்டும்மீண்டும் கொடிய ஆட்சியினர், மக்களின் ஆதரவு தமக்கே உண்டு என்று மெய்ப்பித்துக் காட்டும் முறைகளிலே வெற்றி பெற்றபடி இருப்பதும் உண்டு.

வீழ்த்துவாரற்று இருந்து வருவதனலேயே, அந்த அரசு அக்ரமம் ஏதும செய்திடாத ஒன்று என்றே, அதனுடைய வலிவு நியாயத்தின மீது கட்டபபட்டுவிடடிருக்கிறது என்றே, உண்மை அறிந்தவர்கள் ஒப்புக்கொளள மாட்டார்கள்.

பிடிபடாதிருக்கும் வரையில் கொள்ளைக்காரன் 'காட்டு ராஜா' தான்! — அவனுடைய பதுங்குமிடம் 'கோட்டை'தான்!! ஆனல் கொள்ளைக்காரன், மதிப்புப் பெற்றவனகிவிட முடியாதல்லவா! அதுபோன்றே அக்ரமம் செய்திடும அரசு, பல்வேறு வழிகளில குவித்து வைத்துக்கொண்டிருக்கும் வலிவு காரணமாக, எளியோரை வதைததும், எதிர்ப்போர்களை வீழ்த்தியும், தனது ஆதிக்கததைக் காப்பாற்றிக்கொண்டு விடுவதனலேயே அந்த அரசு அனைவராலும் போறறப்பட வேண்டியதாகிவிட முடியாது.

படைபலம் காட்டி ஆதிக்கத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் அரசு என்றாலும்சரி, மககளாட்சி முறைபபடி நடந்துகொள்வதாகக் கூறிக்கொண்டே, மக்களை மயக்கியும் மிரட்டியும் அடிமைபபடுத்திடும அரசு என்றாலும்சரி, வீழ்த்தப்படாத காரணத்தினலேயே அத்தகைய அரசு விரும்பப்படவேண்டிய அரசு என்று கருதிவிட முடியாது.

ஒரு அரசின் பெருமை, அதனிடம் குவிந்துளள 'அடக்கிவைக்கும்' வலிவிலே இல்லை. மக்களின் அன்பினைப் பெறுவதிலேதான் இருக்கிறது. அச்சமூட்டி 'ஆம' என்று மக்களைச சொல்லவைப்பதோ, ஆசைகாட்டி 'சரி' என்று பேசவைப்பதோ, சில காலத்துக்கு மட்டுமலல, நெடுங்காலத்துக்குககூட நடக்கலாம்; காடடிலே சுட்டுக் கொல்லப்படும புலிகளிலே கிழபபுலி இலலையா! அதுபோல ஆதிக்க அரசு வீழ்ந்துபட நாடகள் அதிகம்கூட ஆகலாம். ஆனல் 'நெடுங்காலம்' இருந்துவருவதனலேயே அத்தகைய அரசு; நேர்மையானது எனறு கூறிவிட முடியாது. இன்று நேற்று தோனறியதா பாமபு! நெடுங்காலமாகப் புரண்டுகிடக்கிறதே! பழங்காலந்தொட்டு இருந்து வருவதனலேயே பாமபு பாராட்டிச் சீராட்டி வளர்ககப்படவேண்டியது என்று கருதிக்கொள்கிறோம்.

இல்லையே!!

அரசாள வாய்ப்புப் பெற்றுவிடுபவர்கள் இதனை உணருவதில்லை, ஒப்புக்கொள்வதில்லை; இறவா வரம் பெறறுவிட்டதாகவே எண்ணிக்கொளகிறார்கள். அதிலும் தமக்கு எதிராக எழும் கிளர்சசிகளைச் சாய்த்துவிடும்போது ஆதிககக்காரர்களின மகிழ்ச்சி, வெறியையே கிளப்பிவிட்டுவிடுகிறது!

பார்ததீர்களா, எதிர்ப்பு படுசூரணமானதை! என்று கொக்கரிக்கவும், ஆண்டவன் அருளும. மக்களுச்குத் தமமிடம் உளள தளராத நம்பிககையுநதான் எதிர்பபு முறிந்ததற்குக் காரணம் எனறு மார்தட்டிப் பேசவும், இதுபோலத்தான் இனி எம்மை எதிர்ககத் துணியும எவருக்கும; என்று மிரட்டிப் பேசவும், நாககு நீணடுவிடுகிறது.

மககளாட்சியில படைகளைக்கொண்டு தாக்குவது, கோட்டைகளை முற்றுகையிடுவது எனும் முறைகள் இல்லை; இங்கு உளளது, ஓட்டுகளைப் பெறுவதுமட்டுமே. எனவே, இந்த 'ஓடடுகளை'ப் பெறுவதிலே ஆதிககக்காரர்கள், சூழ்ச்சிமிகுவழிகள் பலவற்றன துணைகொண்டு வெற்றிபெற்றுவிட்டால், பழைய நாட்களில் படைபலம் காட்டி, மக்களை வாட்டி வதைத்து வெற்றிகளை ஈட்டிக்கொண்டு பயங்கர ஆட்சி நடாத்திவந்த ஆதிக்கக்காரர்கள்போலாகிவிடுகின்றனர்; ஆர்ப்பரிக்கின்றனர்; பார்ததீர்களா எமது வெற்றியை; மக்கள் எமது பக்கம் என்பது புரிந்துவிட்டதா; இனி எம்மை எவர் என்ன செய்யமுடியும் என்று ஆணவம் பேசுகின்றனர்.

(12-ம் பக்கம் பார்க்க)

தம்பி

"மனிதனும் மிருகமும்"

அடவியிலே அலைந்துகொண்டும், குகைகளிலே பதுங்கிக்கொண்டும், கல்லையும் கட்டையையும் கருவிகளாகக்கொண்டு மிருகங்களுடன் போரிட்டுக்கொண்டும் காயோ, கனியோ, கிழங்கோ, மிருகத்தின் இறைச்சியோ, பசிததீயைப் போக்கிகொள்ள எதனையோ உண்டு, கதிரவன் கக்கிடும் வெப்பத்தாலும், கடுங்குளிராலும், பெருமழையாலும், பேய்க் காற்ருலும், நிலநடுக்கத்தாலும், காட்டுத் தீயினுலும் அலைக்கழிக்கப்பட்டு, கொல்வது கொலலப் படுவது. துரத்துவது துரத்தப்படுவது என்ற நிலையில், இருந்துவந்த மனிதகுலம் இன்று விணண கத்து விந்தைகளைக கண்டறிந்திட, முனைந்திடும் காலகட்டம வந்து சேர்ந்திருக்கறது. எததனை நெடிய பயணம்! எத்தனை ஆபத்துக்களையும அழிவுகளையும் எதிர்த்து நடாததப்பட்ட பயணம! எங்கு இருந்தான்! எங்கு செல்கிருன்!! எவ்விதம இருந்துவந்தான, எவ்விதமான மாறுதலைப் பெற்றுக்கொண்டிருக்கிருன்! குகைகளில், மொழி அறியாது, தாய்க்கும் தாரத்துக்கும், உடன் பிறந்தாளுக்கும் உள்ளததை வென்ருளுக்கும விததியாசம் தெரியாது, மிருக இசசையை எப்படியோ தீர்த்துக்கொண்டு, உறுமிககிடந்தவன், இன்று சமூகக கட்டுக்கோபபும் சட்ட திட்டங்களும் பெற்று, இந்த அவனியைத் தனது விருப்பததின்படி உருமாறச் செயததுடன் நில்லாது, மேலே மேலே செல்கிருன்; சென்றபடி இருககிருன; வேகவேகமாக; விதவிதமான முறைகளைத் துணைகொண்டு; ஒளி ஒலி இவற்றின் வேகததுடன் போட்டியிட்டபடி!! பெற்ற வெற்றிகள் பெறவேண்டிய வெற்றிகளைததான் நினைவுக்குக கொண்டுவருகின்றன! செனற இடம, இனியும செல்லவேண்டிய இடத்துககு தூண்டுதலைத தருகிறது! பயணம முடிவு பெற வில்லை! பயணத்தின் முடிவு தெரியவுமலலை! எஙகே செல்கிருன? அறிந்திட நேரமல்லை; நினைப்பும் எழவில்லை! பயணம செய்திடவே காலமெல்லாம் செலவாகிறது! எஙகே செல்கிருன? காற்று எங்கே செல்கிறது? ஒலியும் ஒளியும் எஙகே செல்கின்றன? விடை உணடா இவவனுக் களுககு? உண்டு எனில, அஃதே, மனிதகுலம் மேற்கொணடுள்ள பயணததின பொருளையும் அறிந்திடத் துணைசெய்யும். செல்லும இடமும, செல்வதன் நோககமும் அறிநத பிறகு பயணத் தைத தொடரலாம் என்று மனிதன ஓயவு எடுத்துக்கொள்ளவில்லை. செனறுகொணடே இருக் கிருன்! புதிது புதிதாகப் பலவற்றினைக் கண்டறிய வேணடும் என்ற ஆவலால் உந்தப்பட்டு, சென்றவணணம் இருக்கிருன். எதனலோ ஈர்க்கப்பட்ட நிலையில், சென்றபடி இருக்கிருன. சந்திரமண்டலத்துடன் அந்தப் பயணம நின்றுவிடப்போவதில்லை! செவ்வாய மணடலம் அழைக் கிறது!! காணவேண்டிய மண்டலங்கள், இனனும் எத்தனை எத்தனையோ உள்ளன! எல்லாம புரிநதுவிட்டது, எல்லாம் கிடைத்துவிட்டது, இனிப் பயணம் தேவையில்லை என்று கூறிடும் கட்டம இல்லவே இல்லை! செனறுகொணடே இருப்பது மனிதகுலத்தின், பொழுதுபோககுமலல, தொழிலும் அல்ல; இயல்பு! இயங்கும் நிலை உளளமட்டும் இந்த இயலபு இருந்தேதீரும். சுற்றும் பமபரம கணடு வியந்திடும குழவிபோல, பறந்திடும் விமானம கண்டு மகிழ்நதிடும இளைஞன் போல, இன்று மனிதகுலப் பயணததிற்கான வழிவகைகளைக் கணடறிநது, ஒரு வநதையி லிருந்து மற்ருேர் விநதைக்கு அழைபபு விடுத்திடும விஞ்ஞானிகளின கணடுபிடிப்புகளையும் செயலமுறைகளையும் கணடு, நாம பெருவியப்படைகிருேம்.

உண்டு உறங்கி, உறவாடி இனம் பெருக்கி, மாண்டு மடிந்துபோவது மனித குலத்தின் செயலின் அடிப்படை கிடைத்ததை உண்டு, அலுப்பினல் வீழ்ந்து உறஙகி, வலிவு காட்டி



உறவாடி இனம் பெருக்கி, அழிவு தன்னை நோக்கி வரும்போது எதிர்த்துப்பார்த்து, இயலாதபோது மாண்டுபோவது, மனிதகுலத்தின் பாலபருவ நிலையாக இருந்தது. இந்த நிலையிலிருந்து, தேவைப்படுவதை உண்பது, உண்பனவற்றை உண்டாக்கிக்கொள்வது வேலை செய்வதால் அலுப்படைவது. அதனால் இழந்துவிட்ட வலிவினைத் திரும்பப்பெற உறங்குவது, உடல் உணர்ச்சிக்காக மட்டுமின்றி உள்ளத்தில் எழுந்திடும் பற்று பாசம் காதல் எனும் உணர்ச்சிகளைச் செம்மைப்படுத்தி உறவு முறையினை வகுத்துக்கொண்டு அதன்படி ஒழுகுவது, சாவு வந்திடும் என்று தோன்றிடும்போது, தடுப்பு முறைகள் தேடுவது, இறுதியில் மடிந்துபோவது எனும் கட்டம் வருவதற்குள் மனிதன் பலப்பல நூறாயிரம் ஆண்டுகளைக் கழித்துவிட்டான்; ஆண்டுகள் என்ற காலக் கணக்குக்கூடத் தெரியாத நிலையிலேயே, எத்தனை எத்தனையோ ஆயிரமாயிரம் ஆண்டுகளைக் கழித்துவிட்டான். மனிதன், உருப்பெற்று உலவத் தொடங்கி ஐந்து இலட்சம் ஆண்டுகளாகின்றன என்று விஞ்ஞான விற்பன்னர்கள் கூறுகின்றனர். மிருக நிலையிலேயே, மனிதன் நீண்ட நெடுங்காலத்தைக் கழித்துவிட்டிருக்கிறான். எனினும், துவக்க முதலே, மனிதன் சில தனித்தன்மைகளையும் தனிச்சிறப்பினையும் பெற்றிருந்ததால், மிருக நிலையினை மாற்றிக்கொள்ளும் முயற்சியிலே ஈடுபட்டு, மெள்ள மெள்ள வெற்றி கண்டான். மிருகங்கள், இருக்கும் இடத்திற்கு ஏற்ற இயல்பைப் பெறுகின்றன; அந்த இயல்பு, மாற்ற முடியாததாகிவிடுகிறது உறுமிக்கொண்டிருந்த புலியும், சீறிக்கொண்டிருந்த பாம்பும், கொத்திக்கொண்டிருந்த வல்லூறும் இன்றும் அதே இயல்புடனேயே இருந்திடக் காண்கிறோம். மனிதனை விட மிருகங்கள், எத்தனையோ காலத்துக்கு முன்பிருந்தே உள்ளன; எனினும் இயல்பு மாறவில்லை; மாற்றிக்கொள்ளும் திறமை மிருகங்களுக்கு அமையவில்லை.

இயல்பு, சுற்றுச்சார்பினாலே உருப்பெறுகிறது, வளருகிறது; எனவே இயல்பு மாறவேண்டுமெனில் சுற்றுச்சார்பு மாறவேண்டும்; மாற்றி அமைக்கப்பட வேண்டும்; அதற்கான தனித்திறமை மிருகங்களிடம் இல்லை; எனவேதான் இயல்பு, அன்று இருந்தது போன்றே இன்றும்—மிகப் பெரும் அளவுக்கு — இருந்திடக் காண்கிறோம்.

மிருகங்களின் உருவ அமைப்பு, நடமாட்டமுறை இவற்றிலே ஏற்பட்டுவிட்ட மாற்றங்கள்கூட, தாமாக விரும்பி, முயன்று ஏற்படுத்திக்கொண்ட மாற்றங்கள் அல்ல. இருந்துவந்த சுற்றுச்சார்பு தானாக மாற்றமாகி, அதன் காரணமாக, மிருகங்களின் நிலையிலேயும் சில மாற்றங்கள் ஏற்பட்டன, ஏற்படுத்திக் கொள்ளவில்லை!! இதிலேதான், மனிதனுக்கும் மிருகத்துக்கும் உள்ள அடிப்படை வித்தியாசம் அடங்கி இருக்கிறது.

யானை முதல் பூனைவரை, பாம்பு பறவை பூச்சி புழு என்பவைகள் ஈறாக, வடிவமாற்றம் நிரம்ப ஏற்பட்டுள்ளன. என்பதனை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து கூறுகின்றனர்.

இன்று காணப்படும் யானைக்கும், பண்டு இருந்து வந்ததற்கும், உள்ள வித்தியாசத்தைக் காணும்போது, திடுக்கிட்டுப் போய்விடுவோம். நீர் வாழ்வன நிலம் வாழ்வன, ஊர்வன, பறப்பன, எனும் எவற்றிலும், பெரிய மாறுதல் வடிவத்திலே ஏற்பட்டுவிட்டன. குதிரை காட்டுக் குதிரையாக இருந்த காலத்திலிருந்து வெகுவாக முன்னேறி, இன்றைய நிலையினைப்பெற்றது. நகரக் கூட முடியாதபடியான மாமிச மலையாக இருந்து வந்த பல மிருகங்கள் அழிந்தே போய்விட்டன. இன்று உள்ள மிருகங்கள் நமது முன்னோர்கள் எவ்விதம் இருந்தனர் என்று கண்டறியுமானால், வெட்கித் தலை குனியும். மிருகங்களைச் சொல்கிறோமே! நமது இலட்சணம் மட்டும் என்ன! நமது மூல மூதாதை குரங்கு!! பெருமைப்படத்தக்கது என்றா கூற மனம் வரும்.

சுற்றுச் சார்பினை மாற்றி அமைத்து இயல்பையும் வடிவினையும் அதற்கு ஏற்ப, மிருகங்கள் பெற்றிடவில்லை; மனிதன் மட்டுமே, சுற்றுச் சார்பினைத் தனக்கு ஏற்றதாக, வசதி அளிப்பதாக, அமைத்துக் கொண்டான்.

மிருகங்கள் போலவே, புதர்களில் பதுங்கிக் கிடந்தவன். குகைகளைக் கண்டான்; அதிலே இருந்துவந்த மிருகங்களை விரட்டிவிட்டோ கொன்றுவிட்டோ, குகைகளைத் தனதாக்கிக் கொண்டான். குகைகளைக் கண்டறிந்தது மட்டுமல்ல, சில காலத்துக்குப் பிறகு, மலைகளைக் குடைந்து குகைகளை உண்டாக்கிக் கொண்டான். சுற்றுச் சார்பினை மாற்றி அமைத்திட அமைத்திட, அதற்கு ஏற்றவிதமாக இயல்பு மாறிக்கொண்டு வரலாயிற்று.

சுற்றுச் சார்பினைத் தனக்குச் சாதகமான முறையில் மாற்றி அமைத்துக் கொள்ளும் திறமை பெற்றிருக்கும் காரணத்தினாலேயே, மனிதன் எங்க இடத்திலும் இருந்திடும் வகை கண்டறிந்து வாழ்ந்திட முடிகிறது.

வெப்பம் தீயெனத் தாக்கும் சகாரா பாலைவனத்திலும் மனிதன் இருக்கிறான், பனி மலை மிகுந்த அயிஸ்லாந்திலும் இருக்கிறான்; கடலோரமும் அவனைக் காணலாம். மலைமுகட்டிலும் அவன் இருக்கிறான்; ஆற்றோரமும் இருக்கிறான்; அடவியிலும் இருக்கிறான்; பெருமழை பொழிந்தபடி உள்ள இடத்திலும் இருக்கிறான்; வரட்சி மிகுந்த இடத்திலும் இருக்கிறான்.

மிருகங்களின் நிலை அவ்விதமில்லை. பனிப் பிரதேசத்து மிருகங்களை பாலைவனத்தில் கொண்டு சேர்த்தால் செத்துப் போகின்றன; நீர்வாழ்வனவற்றை நிலத்தில் கிடத்தினால் உயிர் போய்விடுகிறது. சில சுற்றுச் சார்பிலே வாழ்ந்திடும் வகையிலுள்ளவைகள், மாறான சுற்றுச் சார்பிலே கொண்டு சேர்க்கப்பட்டாலோ, தாமாகச் செல்ல நேரிட்டாலோ மடிந்து விடுகின்றன.

மிருகக் காட்சிச் சாலைகளில் இதனை உணர்ந்தே, எந்தெந்த மிருகத்துக்கு என்னென்னவிதமான சுற்றுச் சார்பு தேவையோ அதனை அமைத்துத் தருகிறார்கள்.

மனிதன், எவ்விதமான சுற்றுச் சார்புள்ள இடத்திலும் இருக்கிறான்; காரணம். அதனைத் தனக்கு ஏற்ற தாக்கிக்கொள்ளும் முறைகளைக் கண்டறிந்துகொள்ள முடிவதால்.

கடுங்குளிர் மிக்க இடமானால் கம்பளிச் சட்டை அணிந்துகொள்வதன் மூலம், கொடுமை நேரிட்டுவிடாதபடி தடுத்துக் கொள்கிறானல்லவா! மானோ மாடோ கடுங்குளிரிடத்தில் கொண்டு செல்லப்பட்டால் என்ன செய்திட முடியும்! விறைத்து இறந்துவிடுகின்றன.

மிருகங்கள், தமக்கென்று அமைந்துவிட்ட உடலமைப்பு, இயல்பு இவற்றினை மட்டுமே கொண்டு செயல்பட வேண்டியிருக்கிறது; வேறு துணை—வேறு கருவி—வேறு முறை — பெற்றிடவும் பயன்படுத்திக் கொள்ளவும் முடிவதில்லை. நகர்ந்து செல்லும் உடலமைப்பும் இயல்பும் பெற்ற ஆமை, வேகமாகப் பாய்ந்தோடும் குதிரையின் துணைபெற்று, விரைந்து ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் சென்றிட முடியுமா! ஆமை,

அந்த நாளிலிருந்து நகர்ந்துகொண்டுதான் இருந்திடு கிறது—வேகம் பெறமுடியவில்லை! குதிரை, எப்போதும் வேகமான ஓட்டத்தைப் பெற்றிருந்திருக்கிறது.

மனிதன், தனக்கு உள்ள உடலமைப்பு, இயல்பு, என்பவைகளினால் மட்டும் கிடைத்திடும் நடவடிக்கை களோடு நின்றுவிடவில்லை; வேறு துணை பெறுகிறான்; வேறு கருவிகளைத் தேடுகிறான்.

பறந்திடும் உடலமைப்பு மனிதனுக்கு இல்லை! ஆனால் பறந்து செல்கிறான், பறவைகள் வியந்திடத் தக்க விதத்தில்.

நீருக்கடியிலே இருந்திடத் தக்கதான உடலமைப்பு மனிதனுக்கு இல்லை; ஆனால் நீர்மூழ்கிக் கப்பல் அமைத்து, அதன் துணைகொண்டு, நீருக்கடியில் இருந் திடும் வழி பெற்றுவிட்டான்.

கிடைத்ததைக் கிடைத்தபடியே தின்றிடும் மிருக முறையிலிருந்து வந்தான் மனிதன்; இன்று கிடைப் பதை அல்ல, உற்பத்தி செய்வதை; அதே முறையிலே அல்ல, தன் சுவைக்கு ஏற்ப பக்குவப்படுத்தியும், மற்றப் பொருளுடன் கலந்தும் உண்ணத் தலைப்பட்டு விட்டான்.

மிருகங்கள், நடமாடுகின்றன, மனிதன் வாழு கின்றான் என்று கூறிடுவதற்கான காரணத்திலே இது முக்கியமானது; மனிதன் தனக்கான வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறான்; மிருகங்களுக்கு அமைந்து விடுகிறது.

மக்களுக்கும் மாக்களுக்கும் இயல்பிலேயும் நட வடிக்கைகளிலேயும் வேறுபாடு காணமுடியாதிருந்த காலத்தை இன்று ஆராய்ச்சியாளர்கள், எடுத்துக் காட்டுகிறார்கள். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் மாக்களை வேட்டையாடுவதும், மாக்கள் மக்க ளைப் பிய்த்துத் தின்பதும் மாறி மாறி நடைபெற்றுவந்த நிகழ்ச்சிகளாக இருந்திருக்கின்றன.

இராகுல சங்கீத்ராயன் எனும் ஆராய்ச்சியாளர், கி. மு. 6000-ல், இருந்த நிலைமை பற்றி எழுதியிருப்ப தைப் பார்க்கும்போது, எந்தவிதமான வாழ்க்கை முறையிலிருந்து மனித குலம் இன்றையப் புதுமை வாழ்க்கைமுறைக்கு வந்திருக்கிறது என்பது புரிகிறது; புரியும்போது வியப்பு, திகைப்பூட்டும் அளவுக்கு ஏற்படுகிறது.

பனிப் படலம் மிகுந்த வால்கா நதிப் பிரதேசத் தைக் காட்டுகிறார் ஆராய்ச்சியாளர். நீலநிற வானம் மேலே! கீழே பனி கப்பிக் கொண்டுள்ள நிலப்பரப்பு. பெரிய பெரிய மரங்கள்—கிளைகளிலே பனிக் கட்டிகள். மிருகங்களின் உறுமல், பட்சிகளின் கலகல ஒலி, வண்டுகளின் ரீங்காரம் எதுவும் இல்லை. திகைப்பூட்டும் அமைதி.

மலைகளிலே இயற்கையாக அமைந்துள்ள குகை களே வீடுகள்!

ஒரு கிழவி—ஆடை இல்லை—கற்றை கற்றையாக ரோமம் அடர்ந்திருக்கும் நிலையில்—கண்களில் ஒளி இல்லை—ஒரு வெறிச்சிட்ட பார்வை.

எலும்பைச் சுவைத்தபடி சில பெண்கள்.

அதிலே ஒரு துண்டு வீசப்படுகிறது அழுகுர லெழுப்பும் குழந்தையிடம்.

குகையிலே பதுங்கிக் கிடக்கும் மனிதமிருகங்கள்!

நெருப்பு மூட்டிட விறகு தேடி, கட்டுகளாக்கித் தூக்கிக்கொண்டு வருகிறார்கள் இளம் பெண்கள்.

ரோமம் நீக்கப்படாத தோலால் ஆடை, அவர்களுக்கு.

நீண்ட கூர்மையுள்ள கம்பு, நன்றாகத் தீட்டிக் கூர்மையாக்கப்பட்ட கல் அம்பு!

குடும்பத் தலைவி முன்னே செல்ல, மற்றவர்கள் பின்னால் செல்கிறார்கள்.

ஆழ்ந்த தூக்கத்தில் உள்ள கரடிகளைத் தாக்கிக் கொல்கிறார்கள்—உணவுக்காக.

குகைக்கு வருகிறார்கள் — வழியிலே ஓநாய்கள் சூழ்ந்து கொள்கின்றன. போர்!

ஓநாய் கொல்லப்படுகிறது, அதன் பச்சை இரத் தத்தை இவர்கள் குடிக்கிறார்கள்–சதையைப் பிய்த்துத் தின்கிறார்கள்.

இவர்களிலே சிலரை ஓநாய்கள் கொன்று, சதை யைப் பிய்த்துத் தின்கின்றன.

இது ஒவ்வொருநாளும் — கொல்வது கொல்லப் படுவது—குருதிகொட்டுவது குருதி குடிப்பது — நாலு கால் மிருகங்களுக்கும் இரண்டுகால் மிருக்கங்களுக் கும் ஓயாத போர்! இது வாழ்க்கை முறையாக இருந் திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறார் ஆராய்ச்சி யாளர்.

இவ்விதமான முறையிலா மனிதகுலம் இருந்து வந்தது என்று எண்ணும்போதும், இவ்விதமாக இருந்துவந்த மனிதகுலத்தில், வழிவழி வந்தவர்களே நாம் என்பதை எண்ணும்போதும், எல்லாவகையாலும் மனிதன் உயர்ந்தவன், சிறந்தவன் என்ற எண்ணமே ஒருவிதமான கேலிக்கூத்தாகத் தென்படும்.

மாக்களுக்கும் நமக்கும் மாறுபாடு தெரியமுடியாத நிலையிலே இருந்து, வெகுதூரம் முன்னேறிவிட்டோம் என்ற எண்ணம் ஒருவிதமான மன நிம்மதியைக் கூடத்தரும் என்பதில் ஐயமில்லை.

கூர்ந்து பார்த்தால், முறையிலே வியக்கத்தக்க மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்றாலும், அடிப்படை அலுவல்கள், இயல்புகள், உணர்வுகள், வெகுவாக மாறிவிடவில்லை என்பது புலனாகும்; புலனாகும்போது, மாக்களைவிட நாம் மிக அதிகமாக முன்னேறிவிட்டோம் என்று கூறிக்கொள்வதற்கில்லையே என்ற எண்ணம் நம்மைப் பிடித்து வாட்டி வதைத்திடும்.

கல்லைத் தீட்டிக் கருவியாக்கி, காட்டுமிருகங்களை வேட்டையாடிக் கொன்றுதின்று உடற்பசியைப் போக்கிக்கொள்வதிலே வரம்புவகை, முறைநெறி என் பவைகளைப் பார்க்காமல் நடந்துகொண்டு வந்த நாட் களிலே, உண்பது உறங்குவது, உறவாடுவது, போராடுவது, பெறுவது தருவது, என்பவைகளுக்கு அடிப்படையாக அமைந்திருந்த அதே உணர்வுகள், இன்றும் அதே விதத்திலே கிளம்பி, மனித குலததை ஆட்டிப்படைத்துக்கொண்டிருப்பதை அறிகிறோம்; அறியும்போது, முன்னேறிவிட்டோம் என்று கூறிக் கொள்ளும் முழு உரிமையை மனிதகுலம் பெறவில்லை என்பது தெளிவாகிறது.

இன்றும், எனக்கு, உனக்கு என்பதற்காகவும், என்னுடையது உன்னுடையது என்பதற்காகவும், அன்றுபோலவே அமளி நடந்தபடி இருக்கிறது! கருவி கள் மாறிவிட்டன, கருத்து மாறிவிடவில்லை; போர் முறைகள் மாறிவிட்டன போர் உணர்வு மாறவில்லை.

கோபம் கொந்தளிப்பு, தாக்குதல் தப்பித்தல், பாய்வது பதுங்குவது — எல்லாம் அன்று போலவே இருந்திடக்காண்கிறோம்.

மலைமுகடுகளில், அடவிகளில், அருவிக்கரை களில் அமளிகள் நடைபெற்றன முன்பு; இப்போது நவநாகரீக நகர்களில், மின்னிடும் மாளிகைகளில், அமளி! முன்பு கல்லாலான கருவிகள்! இன்று அணு ஆயுதம்!

அழிக்கும் உணர்வும், அழிவிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் உணர்வும், அந்த உணர்வு

களின் அடிப்படையில் அமைந்துள்ள போராட்டமும், அன்றுபோலவே இன்றும் இருந்திடக்காண்கிறோம்.

முன்பு, வாழ்நாளில் மிகப் பெரும்பகுதி, போராட்டமாகவே இருந்துவந்தது என்று கூறலாம்; இன்று வாழ்நாளில் ஒரு போராட்டத்துக்கும் மற்றொரு போராட்டத்துக்கும் இடையிலே, 'அமைதி நாட்கள்' இருக்கின்றன. இந்த அளவுதான் மனிதகுலம் முன்னேற்றம் காண முடிந்திருக்கிறது.

அரசு இல்லை ஆகவே அமைதி இல்லை! மார்க்கம் இல்லை ஆகவே ஒழுக்கம் இல்லை! சட்டம் இல்லை ஆகவே சாந்தி இல்லை! அறநூல் இல்லை ஆகவே அறம இல்லை! அறிவாளர் இல்லை ஆகவே அறிவுத் தெளிவு இல்லை!—அன்று: மாக்களுக்கும் மக்களுக்கும் அதிக அளவு மாறுபாடு இல்லாத காலத்தில்.

இன்றோ! அரசு இருந்தும் அமைதி இல்லை; மார்க்கம் இருந்தும் ஒழுக்கம் இல்லை; அறநெறி காட்டப்பட்டும் அறம் நிலைத்து நிற்கவில்லை; அறிவாளர் முயன்றும் அறிவுத் தெளிவு ஏற்படவில்லை!

ஆனால், எழிலூர்கள் பலப்பல, தொழிலின் ஏற்றம் மிகப்பல! மாடமாளிகை, கண்ணைப்பறிக்கத்தக்க விதமாக! கலை கவர்ச்சி தருவதாக! இவைகளுக்கு குறைவு இல்லை.

இவைகளைக் காட்டிலும் மிக முக்கியமானது என்று கூறத்தக்கதான விஞ்ஞான அறிவுப்பெருக்கத்துக்கோ ஒரு அளவு இல்லை! மேலே மேலே செல்கிறது மனிதகுலம், விண்ணிலே உள்ள கிரஹங்களைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர.

புறத்தோற்றத்தைக் காணும்போது, மனிதகுலம் வெகுதூரம், வேகவேகமாக முன்னேறி, உன்னதமான கட்டத்தில் வந்திருப்பது தெரிகிறது

அகத்தில் நெளியும் உணர்வுகளையும், அந்த உணர்வுகள் ஆட்டிப் படைத்திடுவதற்கேற்றவண்ணம் மனிதகுலம் ஆடித் தொலைப்பதையும் பார்க்கும்போது முன்னேற்றம் அடைந்துவிட்டோமா என்பதிலேயே பலமானதோர் சந்தேகம் ஏற்படத்தான் செய்யும்.

வாழப் போரிட்டுத் தீரவேண்டியுள்ள நிலையும், வலிவைக் காட்டிப் பகையைத் தீர்த்துக்கட்டும் முறையும், காடு மிகுதியாக இருந்த நாட்களில் இருந்துவந்ததுபோலவே காடு குறைந்து நாடு எழில்பெற்ற நாட்களிலேயும் இருக்கிறது; இதைப் பார்க்கும்போது, மனிதகுலம் பெற்றுவிட்ட முன்னேற்றம், அடிப்படையை மாற்றுவதாக இல்லை என்பது புரிகிறது; கவலை மிகுந்திடுகிறது.

காட்டுக் குணத்தைப் போக்கிக்கொள்வதிலே பெருமைப்படத்தக்க அளவு முன்னேற்றம் ஏற்படாத நிலையில், மனிதகுலத்திடம் விஞ்ஞானம புதிய புதிய. மிகுதியும் வலிவுள்ள கருவிகளை, முறைகளைக் கொடுத்துவிட்டிருக்கிறதே என்பதனை எண்ணி இன்று பெருத்த கவலைக்குள்ளாகிவிட்டுள்ளனர் பேரறிவாளர் பலர். உணர்வுகளைக் கட்டுப்படுத்திக்கொள்வதிலே மனிதகுலம் வெற்றி பெருத நிலையில், உணர்வுகளின் அடிப்படையிலே அமைந்துவிடும் நடவடிக்கைகளுக்குப் பயன்பட்டுவிடும் விதமாக, இன்றைய விஞ்ஞான அறிவு பல புதிய கண்டிபிடிப்புகளைக கொடுத்துவிட்டிருப்பது, குருடன் கையில். சிக்கிவிட்ட தீப்பந்தம் போன்ற நிலையை உண்டாக்கிவிட்டிருக்கிறது.

இதனை எண்ணும்போதுதான் இன்றைய நிலையில் ஒரு பெரும்போர் மூண்டுவிடுமானால், உலகமே அழிந்துபடும் என்ற அச்சம் எழுகிறது. மனிதகுலம் அழிந்துபடாமல் காப்பாற்றப்படவும். உலகம் மீண்டும் காடு ஆகிடாமல் தடுத்திடவும் வேண்டும் என்ற தூய்மை மிக்க பொறுப்புமிக்க கருத்தினைக் கொண்டவர்கள், உலகப் பெரும்போர் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதை உருக்கத்துடன் எடுத்துரைத்து வருகின்றனர்.

அனேகமாக எல்லா நாட்டுத் தலைவர்களும், உலகப் பெரும்போர் மூண்டுவிடக்கூடாது என்பதிலே மிகுந்த அக்கரை காட்டிப் பேசி வருகின்றனர்.

ஒரே ஒரு நாட்டின் தலைவர் மட்டுமே, பெரும்போர் மூளட்டுமே! உலகிலே அழிவு நடமிடட்டுமே! அழிந்ததுபோக, மிகுந்திருப்பதிலிருந்து மீண்டும் ஒரு புதிய வளர்ச்சி துளிர்க்கும் என்று பேசுகிறார். கூசாது இத்தகைய கொடிய கருத்தினைக் கூறிவருவது மக்கள் கொல்லப்பட்டு மலைமலையாகக் குவிக்கப்பட்டாலும் என்ன என்ற விதமான இரக்கமற்ற இயல்பு கொண்டுள்ள சீனத்துத் தலைவன் மசே-துங் எனும் வெறியன் மட்டுமே.

மனிதகுலம் மெத்தப் பாடுபட்டு பலப்பல ஆயிரம் ஆண்டுகளாக நடத்திய பயணத்தின் பலன் அனைத்தையும் ஒரு நொடியில் பாழாக்கி, மறுபடியும் கற்காலத்துக்குச் சென்றிடும், நிலை பிறந்திடும் ஒரு பெரும்போர் மூண்டிடின் என்ற அசசமும் பொறுப்புணர்ச்சியும், ஓரளவுக்கு. இன்று அரசோச்சுகிறது. இந்த நல்லியல்பையும் நாசமாககிடும் விததில், சீனத்துப் போர் வெறியர்களும் அவர்களின் உறவிலே உவகை கொள்ளும் பாகிஸ்தான் தலைவர்களும், நடந்துகொண்டு வருவது, மனித குலத்துக்கே இழைக்கப்படும் மாபெருந் துரோகமாகும.

இருப்பது போதாது மேலும் வேண்டும் என்ற நினைப்பும், நமக்கு மட்டுமே இருக்கவேணடும் அதனைப் பெற எமமுறையையும் மேற்கொள்ளலாம் என்ற துணிவும், காட்டிலும்சரி, நாட்டிலும்சரி, கொடிய செயல்களுக்குக காரணமாக அமைந்துவிடுகிறது

எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடத்தக்க ஒருவரை ஒருவர் வஞ்சித்தும் அழித்தும்கொள்ளத் தேவையற்ற முறைபெற, விஞ்ஞானம் வழிகாட்டுகிறது. ஆனால் இதற்கு அந்த விஞ்ஞானத்தைப் பயன்படுத்திக்கொள்வதைக் காட்டிலும், அழிவுக் கருவிகளைத் தயாரிப்பதற்காகவே விஞ்ஞானத்தைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

பல விஞ்ஞான விற்பன்னர்கள் இது குறித்துத் தமது கவலையையும் தெரிவித்துள்ளனர்.

பொருளை மிகுதியாக்கிக்கொள்ளவும், வளத்தைப் பெருக்கிக்கொள்ளவும், விஞ்ஞானம் வழிகாட்டத் தயாராக இருக்கிறது; ஆனால் அதனிடமிருந்து வெடிகுண்டுகளையும் அணுகுண்டுகளையுமே அரசுகள் கேட்டுப் பெற்று இறுமாந்து கிடக்கின்றன.

பஞ்சம் பசி போக்கிடும வழிகாட்டப் பயன்பட வேண்டிய விஞ்ஞானம், இன்று பகை மூட்டிட அழிவை ஏவிடப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மனிதனுடைய வாழ்க்கை முறையையே செம்மைப்படுத்தவும், மேம்பாடடையச் செய்யவும் பயன்படவேண்டிய விஞ்ஞானததை. மனிதகுலததின் நாசத்துக்குக் கருவிகளைச் செய்திடும் காரியத்துக்குப் பயன்படுத்துவது கொடுமையினுங் கொடுமை. எனினும் இந்தக் கொடுமை நடந்தபடி இருந்திடக் காண்கின்றோம்.

இன்றுள்ள மனிதகுலம், தனக்குக் கிடைத்துள்ள விஞ்ஞானத்தை இத்தகைய கொடுமைக்குப் பயன்படுத்தினதுபோல, மாக்கள் நிலையிலிருந்து விடுபடாதிருந்த மக்கள், தமக்குக் கிடைத்த கருவிகளைப் பயன்படுத்திக்கொண்டார்களில்லை. அவர்களுக்கு விஞ்ஞானம் நகர் அமைப்பு, பாதை அமைப்பு, பாசன

வசதி, பயிரிடும் முறை, கல்விக்கூடம், மருத்துவக் கூடம் என்பவைகளைத் தரவில்லை — இன்றைய மனித குலத்துக்கு விஞ்ஞானம் தந்துள்ள வசதிகள் மிகப்பல; எனினும் கிளியைக் கொன்று காக்கைக்கு விருந்திடுவதுபோல, விஞ்ஞான அறிவைக்கொண்டு மனிதகுல அழிவுக்கு வழி கண்டுபிடிக்கும் கொடுஞ்செயலில் இன்றைய மனிதகுலம் ஈடுபட்டிருக்கிறது.

டாக்டர் எட்வர்டு டெல்லர் எனும் விஞ்ஞான விற்பன்னர், சென்ற திங்கள், விஞ்ஞானத் துறையை மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படும்விதமாகக் கட்டுப்படுத்தும் உரிமை விஞ்ஞானிகளிடம் இல்லாமலிருப்பது குறித்தும், அவர்கள் நினைத்துக் கூடப் பார்க்கக் கூசிடும் கேடான காரியங்களுக்கு விஞ்ஞான அறிவு ஆக்கித் தரும் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருவது குறித்தும் மிகுந்த கவலையைத் தெரிவித்திருக்கிருர்.

விஞ்ஞானி, பொருள்களைப் படைத்திட விரும்பும் பேரறிவாளன் — அழிவு கண்டு உள்ளம் வெதும்பிடத்தான் செய்வான். தூங்கும் பனிநீர் தங்கிடும் மூங்கில் இலையெனினும் அதனிடம் கரணக் கிடக்கும் கவர்ச்சி அதனிடம் உள்ள உயிர்ப்பு. இதனை மேலும் மேலும் வலிவுள்ளதாக்கிட பொலிவுள்ளதாக்கிட விரும்பும் விஞ்ஞான விற்பன்னர்கள், மனிதர்கள் மாக்களைப் போல ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்வதற்கு, விஞ்ஞானம் பயன்படுத்தப் படுவதுகண்டு, உள்ளம் நொந்து போகின்றனர்.

பசியாலும் பஞ்சத்தாலும் தாக்கப்பட்டோ, இயற்கை விளைவிக்கும் கொடுமைகளால் கொட்டப்பட்டோ, நோயூட்டும் கிருமிகளால் அரிக்கப்பட்டோ, கூனிக் குறுகி, குற்றுயிராகிடும் மக்களை, நிமிர்ந்து நின்றிடச் செய்திட, நிம்மதியான வாழ்வு பெற்றிட வழி காண, இரவு பகல் விழித்திருந்து, பொருள்களின் தன்மையினை ஆய்ந்தறிந்து, புது முறைகளைக் கண்டுபிடித்துத் தந்திடும் விஞ்ஞானிகள், அவர்கள் பெற்றளித்திடும் பேருண்மைகளே மனித குல அழிவுக்குப் பயன்படுத்தப்படுவதனைக் காணும்போது, ஏன் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைத் தந்தோம் என்று எண்ணி வேதனைப்படத்தான் செய்கிருர்கள்.

இதனால்தான் டாக்டர் எட்வர்டு டெல்லர் எனும் விஞ்ஞான விற்பன்னர் மனித குலத்துக்கு உள்ள இன்னலைத் துடைத்து, இன்ப வாழ்வு அளித்திடும் வழிகள் காணவே, விஞ்ஞானம் உடனடியாகப் பயன்படுத்தப்படவேண்டும் என்று கூறியுள்ளார்.

டாக்டர் ராபாட் ஒப்பன் ஈமர் எனும் மற்ருேர் விஞ்ஞான விற்பன்னரும், இதுபோன்றே கூறியுள்ளார். விஞ்ஞானம் இதுவரை பெற்றளித்துள்ள பெரு வெற்றிகளால், மனித குலம் எந்த வகையிலும் அளவிலும் பயன்பெற்றிருக்கிறது என்பது பற்றிய கணக்கெடுத்தாகவேண்டும் என்பதற்காகவே பல்கலைக் கழகமொன்றில் பார்த்துவந்த வேலையைக்கூட உதறித் தள்ளிவிட்டார் இந்த விஞ்ஞானத் துறைப் பெருமகன்.

விஞ்ஞானத் துறையின் வளர்ச்சிக்காகப் பெரும் பொருள் செலவிடப்பட்டு வருகிறது; காலத்தையும் கருத்தூலத்தையும் கணக்கற்ற அளவு செலவிட்டுத்தான் பேருண்மைகளைக் கண்டறிந்து, புதிய கண்டுபிடிப்புகளைத் தருகின்றனர் விஞ்ஞான விற்பன்னர்கள்.

மின்னிடும் விண்மீன்களின் இயல்புகளைக் கண்டறியவும், விண்வெளியில் உலவிடவும், ஆங்கு உள்ள கிரஹங்களைக் காணவும், எத்தனை எத்தனைக் கருவிகள்! என்னென்ன முறைகள்! விண்வெளியிலே நடந்தே காட்டிவிட்டான் சோவியத் நாட்டு மாவீரனொருவன், விஞ்ஞானத்தின் துணைகொண்டு.

இவை எவரையும் வியப்பில் ஆழ்த்தும்; ஐயமில்லை எனினும் மறைந்த மாமேதை ஆல்டேன் என்பார், விண்வெளியின் ஆராய்ச்சிக்காகப் பெரும் பணம் செலவிடுவது தேவைதானு! இப்போது கவனிக்கப்படவேண்டிய பிரச்சினைதானு, விண்வெளி விஷயம் என்று சில ஆண்டுகளுக்கு முன்பே, கேட்டிருந்தார்.

இப்போது விண்வெளி ஆராய்ச்சிக்காகப் பல்வேறு நாடுகளும் செலவிடும் தொகை, கேட்போருக்கு மயக்க மூட்டும் அளவினதாக இருக்கிறது,

> விண்வெளித் துறை பற்றிய ஆராய்ச்சிக்காக மட்டும் ஆண்டொன்றுக்கு 10,000 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது என்கின்றனர்.

இத்தனைப் பெருந்தொகையை, விண்வெளி ஆராய்ச்சிக்காகச் செலவிடுவதனைக் காட்டிலும், மனித உடற்கூறு பற்றிய ஆய்வுத் துறைக்கும், உணவுத் துறை, பொருள் ஆக்கத் துறை, மருத்துவத் துறை ஆகிய வற்றினுக்குச் செலவிட்டிருக்கலாம்—செலவிட வேண்டும் என்ற கருத்தினைக் கூறிச் சென்ருர் ஆல்டேன்.

மக்களின் இயல்புகளே பெரும்பாலும் அவர்களுடைய நடவடிக்கைகளுக்குக் காரணம்; அவர்களின் நடவடிக்கைகளைச் செம்மையாக்கிட வேண்டுமானுல், இயல்புகளை மாற்றிட, அல்லது கட்டுக்குக் கொண்டு வரவேண்டும்; விஞ்ஞானம் அதற்குப் பயன்பட வேண்டும் என்ற கருத்து இன்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள உண்மைகளில் ஒன்ருகும்.

> குற்றவாளி ஒரு நோயாளி! குற்றவாளியைத் தண்டிப்பதனுல் மட்டும் அவனைத் திருத்திவிட முடிவதில்லை.
>
> ஒருவர் இருவரைத் திருத்திவிட்டாலும் குற்றம் எழாதபடி தடுத்துவிட முடிவதில்லை.
>
> குற்றவாளி, ஒரு நோயாளி! ஆகவே அவனுக்கு உள்ள நோயைப் போக்கவேண்டும்; போக்க முடியும்.

இந்தக் கருததுகளை இன்று அறிவாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

> ஆனுல் இதனைத் தொடர்ந்து, இயல்பினைக் கெடுத்திடும் நோயை நீக்கிட வழி கண்டறிந்திடும் முயற்சியில், விஞ்ஞானிகள் ஈடுபட்டு, புதிய முறைகளைச் சமைத்து அளித்திடப் போதுமான தொகை செலவிடப் படுவதில்லை.
>
> நிலவிலே காணப்படும் 'கரை'யின் தன்மையைக் கண்டறியச் செலவிடுவது உடனடியாகத் தேவையா, அல்லது மக்களுடைய மனதிலே மூண்டிடும், அழுக்குகளைப்போக்கிட வழி கண்டிடச் செலவிடுவது உடனடித்தேவையா என்ற கேள்வி, பிறந்துவிட்டிருக்கிறது.

குற்றவாளி ஒரு நோயாளியே என்ற பேருண்மையின் அடிப்படையில், நரம்புகள், உடல் உறுப்புகளிலே சில ஆகியவற்றிலே பழுது பார்ப்பதன்மூலம், புதுப்பித்தமூலம், குற்றம் செய்திடும் இயல்பினை மாற்றிட முடியும் என்று கூறுகின்றனர், அந்தத் துறையின் விற்பன்னர்கள். ஆனுல் அந்தத் துறைக்காகச் செலவிடப்படும் தொகை போதுமான அளவினதாக இல்லை. விண்வெளிபற்றிக் கிளம்பிவிட்டுள்ள வேட்கை பெரும் தொகையை விழுங்கிவிடுகிறது.

குடல் வெந்து கிடப்பவன் வாய் நாற்றமடிப்பதும், நீர்கொண்டவன் தும்மியபடி இருப்பதும், வெப்ப நோயாளன் இருமிக்கிடப்பதும் காண்கிருேம். அவர்களின் நோயைப் போக்கிட மருந்தளிக்காமல், வாய்

நாற்றக்காரனுக்கு நாற்பது ரூபாய் அபராதம், தும்மலொன்றுக்கு எட்டணு கட்டவேண்டும், இருமலுக்கு இரண்டுரூபாய் அபராதம் என்று முறை கூறினல் எப்படி இருக்கும்; முறையாகுமா? ஆகாது. அது போலத்தான், ஒருவனுக்கு அமைந்துவிட்ட உறுப்புகளின் தன்மைக்கோளாறு காரணமாக ஏற்பட்டுவிடும் நடவடிக்கைகளுக்காகத் தண்டனை விதித்திடும் முறை என்ற கூறுகின்றனர்.

உடற்கூறுபற்றிய அறிவுத் துறையிலே கண்டறிய வேண்டுவன நிரம்ப உள்ளன. அந்தத் துறையிலே நல்ல வெற்றி கிட்டக்கிட்ட, குற்றவாளிகளாகப் பலரை ஆக்கிவிடும் அந்த நோயையே போக்கிவிடலாம்; பெருமளவு குறைத்துவிடலாம் என்கின்றனர்.

மக்கட்தொகை எத்தனைவேகமாகவும், அளவினதாகவும் பெருகினலும் கூடக் கவலையில்லை. விவசாயத் துறையிலும், பொருள் ஆக்கத்துறையிலும் புதுப்புது கண்டுபிடிப்புகளைப பெற்று அனைவருக்கும் 'வாழ்வு' அளித்திட இயலும் என்கின்றனர்.

நோயினல் மக்கள் மடிந்துபோவது மட்டுமல்ல, பிழைத்துக்கொள்பவர்கள்கூட, வலிவிழந்து போய்விடுவதன் காரணமாக, அவர்களின் உழைப்புத்திறன் கெட்டுப்போகிறது; அதன் காரணமாக உற்பததித் திறன் உருக்குலைந்துவிடுகிறது; எனவே நோய்களை நீக்கிட வழி காணவேண்டும்; காணமுடியும் என்கின்றனர்.

இந்தத் துறைகளில் செலவிடப்படும் பணம், மனித குலத்தின் இன்னலைத்துடைத்து இதம் தந்திட உடனடியாகப் பயன் தந்திடும். ஆனல் இந்தத்துறைகளுக்காகச் செலவிடுவதைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகத்தொகையை வெறி என்று கூறத்தக்க ஆர்வ உணர்ச்சியுடன் அழிவுக் கருவிகளைக் காண்பதற்கான துறைகளுக்கு வல்லரசுகள் செலவிட்டு வருகின்றன.

மனிதனை, மிருக நிலையிலிருந்து விடுவித்து முன்னேற்றமடையச்செய்ய பயன்படவேண்டிய விஞ்ஞானம், அதனை முறைப்படுத்தி கட்டுக்குள் வைத்துக்கொள்ளத் தவறிவிட்டதன் காரணமாக, மீண்டும் மனிதனை மிருக நிலைக்கே கொண்டுபோய்ச் சேர்க்கப் பயன்பட்டு வருகிறது, என்ற கருத்து இன்று பரவிக்கொண்டு வருகிறது.

இந்தக் கருத்தின் வெற்றியைப் பொறுத்திருக்கிறது, மனித குலத்தின் எதிர்காலம்.

கூடி வாழ்தல், கேடு செய்யாதிருத்தல், உழைத்துப் பிழைத்தல், பகிர்ந்து அளித்தல், என்பவை பாராட்டத் தக்க பண்புகள், என்று பேசிடும் நிலை மாறி, இவையே இனி மனிதகுலத்தின் வாழ்வு முறைகள் என்ருகவேண்டும். அதிலே எந்த அளவு வெற்றி கிடைககிறதோ அதைப் பொறுத்துத்தான், மனிதனுக்கும் மிருகத்துக்கும் உள்ள வேறுபாடு மறையும்.

தம்பி! இந்த எண்ணங்கள் எனக்கு ஏற்படக் காரணம் என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகிருயல்லவா! நான் ஏதும் பெரிய தத்துவ நூலைப் புதிதாகப் படித்து; அதனல் ஏற்பட்ட எணணக் கொந்தளிப்புக் காரணமாக இதனை எழுதவில்லை (த. வெள்ளைப்பாண்டி, பி. எஸ். ஸி, இரண்டாம ஆண்டு படிக்கும் மாணவர்) செயிண்ட் ஜான்ஸ் கல்லூரி இதழில் தீட்டிய கவிதை ஒன்றைக் காணும் வாய்ப்புப் பெற்றேன். அதனைப் படித்ததால் இததனை எண்ணங்கள் எழுந்தன; உன்னிடம் சொலலிவைத்தேன்.

இதோ அந்தக் கவிதையையும் தந்திருக்கிறேன்; படித்துப் பயன் பெற!

எண்ணில்லாப் பொறிகளின விசைகள் தம்மை
இருள்போக்கும் மின்னொளியை நிறைத்து வைத்தாய்
மண்ணுக்குட் புகுந்தாய்நற் கனியைக் கண்டாய்
மனமெட்டாத் தொலைவினையும் கைக்குள் கொண்டாய்
கண்ணுக்குத் தெரியாத பொருளை எல்லாம்
கண்டறியும் நுண்கருவி பலவும் செய்தாய்
விண்ணினையும் காற்றினையும் அளந்தெடுத்தாய்
வியக்கின்றேன்; வியக்கின்றேன்; வியக்கின்றேனே!

பிணியெல்லாம் போக்குதற்கு மருந்தைக் கண்டாய்
பிறநாட்டில் பேசுவதை இங்குக் கேட்டாய்
அணுவையும்நின் ஏவலனுய் ஆக்கிக் கொண்டே
அகலுலகைப் புதுமையினல் நிறைத்து விட்டாய்
இணையில்லாச் செயற்கைக்கோள் பறக்க விட்டாய்
இயற்கைதனை வென்றேனென் றலறு கின்ருய்
திணிசெருக்கால் உன்னைநீ அழித்தல் கண்டு
சிரிக்கின்ருள் சிரிககின்ருள் இயற்கைஅன்னை

ஆதிக்க வெறிகொண்டிவ் வண்ட மெல்லாம்
அழித்திடுவேன்நொடியில் என் றறிவிககின்ருய்
சோதித்துப் பார்ப்பாயாம் குண்டை வானில்!
தொல்லையினை யோரவில்லை: வருங்காலத்தில்
காதற்றும் காலற்றும் பார்வை யற்றும்
கருப்பையுள் குழவியதும் நலிதல் உண்டாம்
போதித்துப் பார்க்கின்ருர் பெரியோ ரெல்லாம்
புழுதியிலே கொட்டியநெய் போலா யிற்றே.

ஏற்றங்கள் பலகண்ட மனிதன் இந்நாள்
இறங்கிவிட்டான் அழிவென்னும் புதை குழிக்குள்
காற்றெல்லாம் நஞ்சாக மாறக் கூடும்
கழனியெலாம் கருவற்றுப் போகக் கூடும்
ஊற்றுக்கள் நச்சாருய் ஓடக் கூடும்
உண்ணுகின்ற மக்கள்உயிர் இழத்தல் கூடும்
கூற்றிங்குத் தலையைவிரித் தாட்டம் போடும்
குவலயமே வெற்றிடமாய்க் காட்சி கொள்ளும்

பயனுள்ள வாள்தூக்கிப் பகையை வெல்லார்
பதடிகளாய்த் தம்முடலை யரிவார் போலும்
வயலுக்குக் களைநீக்கும் கருவி கொண்டு
வளர்பயிரைத் துண்டாக்க முனைவார் போலும்
கயமைக்கு நல்லறிவை உகுத்தல் போலும்
கருதிவிட்டாய் அணுவாலே யுலகைத் தாக்க
நயமான வேலைக்கே அணுவைக் கொண்டால்
நலமென்பேன் இல்லையேல் அழிவே மிஞ்சும்.

அண்ணன்,

அண்ணாதுரை

5-ம் பக்கத் தொடர்ச்சி

கொடுமையை ஒழித்திட, ஆதிக்கக்காரரின் பிடியை அகற்றிட, மேறகொளளபபடும் போராட்டம், ஓரிரு யுதத களத்து நிகழ்சசியுடன் முடிவடைந்துவிடுவதல்ல — களத்திலே ஏறபடடுவிடும வெறறி தோலவியைககொண்டு மட்டும், போராட்டத்தின எதிர்காலத்தையும், இறுதி வடிவத்தையும், கணிததுவிட முடியாது.

தேர்தல் வெற்றிகள்கூட அந்த வெற்றிகளைப் பெற்றுவிட்ட ஆதிக்கக்காரர்களின் எதிர்காலத்தை உறுதிப்படுத்திவிட முடியாது—கொடுமை நீளுகிறது என்று வேண்டுமானுல் கூறலாம்! கொடுமை செய்பவன் கொடி பறக்கிறது பார்! எனது வெற்றிக்கொடி!! என்று கூறிவிடுவதால, கொடுமையைக் கொடுமை அல்ல என்று குறை மதியாளரும் கூறிடார்.

ஆனுல் தேர்தலில் பெற்றிடும் வெற்றியை—அது எந்தவிதமான சூது சூழ்ச்சிகளின துணைகொண்டு பெறப்படடது எனினும — எடுத்துக் காட்டி, அஃதொன்றே, தமது தூய்மைககுச் சான்று என்றும், தமது நேர்மைக்குச் சான்று என்றும பேசிடும் இயல்பு இருந்திடக் காண்கிருேம்.

உலக முற்போக்காளர் அனைவரும் உருகினர், கண்ணீர் வடித்தனர், விடுதலை வீரனுகத் திகழ்ந்த லூமும்பா படுகொலை செம்யப்பட்டது கேட்டு. அந்தப் படுகொலைக்குக் காரணமாக இருந்ததாகக் கூறி, ஷோம்பே என்பானைக் கண்டிக்காத நேர்மையாளர் இல்லை! உலகம் திகைத்து திடுக்கிட்டு, பதைத்துப் பதறி, அந்தப் படுகொலையைக கணடித்தது.

ஷோம்பே உலக முற்போக்காளர்களின் கண்டனத்துக்கு ஆளாகி, ஓட ஓட விரட்டப்பட்டும், ஒண்ட இடம் கிடைக்காமல் திண்டாட்டத்தில் அகப்பட்டும கிடந்ததையும் கண்டோம்.

இன்று அதே ஷோம்பே காங்கோ நாட்டிலே நடைபெற்ற தேர்தலில் வெறறி பெற்றுவிட்ட செய்தியையும் படிக்கிருேம்.

ஷோம்பேயின் கட்சி, மக்களின் ஆதரவைப் பெற்றுவிட்டிருக்கிறது—தேர்தல் முடிவின்படி.

எப்படி முடிந்தது? என்ன எண்ணிக் கொண்டு ஷோம்பே கட்சிககு அந்த மக்கள் ஓட்டுப் போட்டார்கள்? என்னென்ன சூது சூழ்ச்சிகளைக் கையாண்டு ஷோம்பே ஓட்டுகளை இந்த அளவு பெறமுடிந்தது?—என்ற இவை பற்றி நேர்மையாளர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிருர்களேயன்றி, தேர்தலிலே வெற்றி பெற்றுவிட்டதாலேயே, ஷோம்பே, குறறமற்றவன், கொடுமை செய்யாதவன், நேர்மையாளன் என்று எவரும் ஒப்புக்கொள்ளவில்லை.

நிறவெறி கொண்டு ஆர்ப்பரிக்கும் வெள்ளையன் அயான்ஸ்மித் — உலக நேர்மையாளர்கள் ஸ்மித் கையாண்ட முறைகளையும் கொண்டுள்ள போக்கையும் வன்மையாகக் கண்டித்தனர். பிரிட்டனிலேயே ஸ்மித்துடைய போக்குக்குப் பலத்த எதிர்ப்பு.

அயான்ஸ்மித் இப்போது ரோடீஷியாவில் நடைபெற்ற தேர்தலில வெற்றி பெற்றுக் காட்டியுளளதைக் காணகிருேம். நிறவெறி பிடித்த ஸ்மித்துடைய கட்சியினர் மூன்றில இரண்டு பஙகு இடஙகளைக் கைப்பற்றிவிட்டனர்.

மககள் என் பக்சம் என கொள்கைக்கும் திட்டத்துக்கும் பேராதரவு!! என்று ஸ்மித் ஆர்ப்பரிக்கும்போது உலக அறிவாளர்கள் என்ன கூறுகிருர்கள்? ஸ்மித் கொளகை நியாயமானது என்ரு? கூறுவார்களா!, இல்லை! ஸ்மித அந்த வெற்றியைப் பெற கையாண்ட முறைகளை ஆராய்ந்து பார்தது, வெறறியின் போலிததன்மையை எடுததுக காடடுகினறனர்.

ஷோம்பேயும், ஸ்மித்தும் தேர்தலில் வெற்றி பெற்ற தனுலேயே அவர்களைத் தூய்மையாளர், நேர்மையாளர் எனறு ஏற்றுக்கொள்ள அறிவாளர் இசையவில்லை.

எதிர்ப்புகளை வீழ்த்தி மக்களின் அடிப்படை உரிமைகளை அழித்து தமது விருப்பம்போலச் சட்டங்களை இயற்றி, அடக்கு முறைகளை அவிழ்த்துவிட்டு, பயங்கரமான சர்வாதிகாரத்தை 37 ஆண்டுகளாக நடத்திவருகிருர், சலாசர் போர்ச்சுகல் நாட்டில்!

அவருடைய 76வது பிறந்த நாள் விழா சென்ற கிழமை கொண்டாடப்பட்டது.

அதே நாள், அவருடன் தேர்தலில் போட்டியிடத் துணிநது, தோறகடிக்கப்பட்டு, போலீசாலும் பட்டாளத்தாலும் வேட்டையாடப்பட்டு, நாடு கடத்தப்பட்டு, வெளிநாடுகளில் தலைமறைவாக உலவிவந்த டெல்காடோ என்பவருடைய பிணம், கண்டுபிடிக்கப்பட்டதாம்—வேருேர் நாட்டிலே?

உலகுக்கே தெரியும் டெல்காடோவைக் கொடுமைப் படுத்தியவர், சலாசர் என்பது.

போர்ச்சுகலின் ஆதிக்கத்திலிருந்துவிடுபட அங்கோலாவிலும், மொசாமபிக்கிலும் கிளர்ச்சி நடத்திய விடுதலை வீரர்கள் பல்லாயிரவர் சலாசர் ஏவிய படையினுல் படுகொலை செய்யப்பட்டனர் என்பதனையும் உலகு அறியும்.

அப்படிப்பட்ட சலாசர் 37 ஆண்டுகளாக ஆதிக்கத்தில் இருந்து வருகிருர்.

அவ்வளவு ஆண்டுகளாக சலாசர் ஆதிக்கத்தில் இருப்பதனுலும், அந்த ஆட்சியை வீழ்த்த எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகள் தோற்றுவிட்டதனுலும், சலாசர் போக்கு நியாயமானது என்ரு உலக அறிவாளர்கள் கூறுகின்றனர்? இல்லை.

முப்பத்திஏழு ஆண்டுகளாகச் சர்வாதிகாரம் செலுத்தும் சலாசரிடம் அலல, அந்த ஆட்சியை எதிர்த்ததால் கொடுமைக்காளாக்கப்பட்டு மடிந்துபோன டெல்காடோவின் பிணத்தினிடம்தான் உலகப் பேரறிவாளர்கள் அதிக மதிப்புக் காட்டுகிருர்கள்.

ஷோம்பே, ஸ்மித் என்பார்போல, சலாசரும் தேர்தல் வெற்றியைக் காட்டுகிருர்! ஆனுல் நேர்மையாளர்கள் அந்த வெற்றிகளைக் கண்டு, அவர்களை மதித்திடத் தயாராக இல்லை? கண்டிக்கத்தான் செய்கிருர்கள். தர்மபுரியைக் காட்டினுலும், தருக்கராட்சி ஒப்புக்கொள்ளப்பட்டுவிடுமோ! என்று கேட்கின்றனர்.

✻

உங்கள் சரக்குகளை சென்னையிலிருந்து
எங்கு அனுப்பவேண்டி இருந்தாலும்
எங்களுக்கு போன்மூலமோ கடிதம்
மூலமோ தெரியப்படுத்துங்கள்.

ஸ்டேண்டர்டு ரோடுவேஸ்,
18, டேவிட்சன் தெரு,
சென்னை-1.
போன் நெ. 29834

4-ம் பக்கத் தொடர்ச்சி

தெரியாமல் நானும் அவற்றின் விளையாட்டை மெய் மறந்து பார்த்துக்கொண்டிருந்தேன்.

"ஏய், திருடி! உனக்கென்ன அங்கே திருட்டுப் பார்வை..." என்று அவர் எழுந்து செல்லமாக என் கன்னத்தைத் திருகித் தட்டினார்.

திடுக்கிட்டுத் திரும்பிய நான், என்னையும் அறியாமல் அவருடைய பரந்த மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அவரை இறுக அணைத்துக்கொண்டேன். என் இதயம் முழுவதிலும் ஒருவித குறுகுறுப்பு நிறைந்தது. 'ஜிவ்' என்ற உணர்ச்சியால் நான் நிலைகுலைந்து போனேன். அப்படியே அந்தரத்தில் மிதப்பதைப் போன்ற உணர்வு என்னை மெய்சிலிர்க்கவைத்து விட்டது. ஏதோ ஒருவித பரபரப்பால் என்னென்னவோ செய்துவிடவேண்டும்போல் மனமும் உடலும் குறுகுறுத்தனவே தவிர, என்ன செய்வது என்று புரியாமல் தவித்தேன். நாங்கள் நெடுநேரம் அப்படியே அரவணைத்து நின்றுகொண்டிருந்தோமேயன்றி ஒருவரோடு ஒருவர் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. என் கண்களில் வழிந்த ஆனந்தக் கண்ணீர் அவர் மார்பை நனைத்தது.

"அல்லி..." என்று அழைத்துக்கொண்டே அக்கா கூடத்தைத்தாண்டி வந்தார்கள்.

நாங்கள் சட்டென்று விலகிக்கொண்டோம். எங்களை அவர்கள் பார்த்துவிட்டிருப்பார்களோ என்ற திகிலுடன் நாங்கள் ஒருவரை ஒருவர் கள்ளத்தனமாகப் பார்த்துக்கொண்டோம்.

அக்கா, அத்தானை நோக்கி "அல்லி வந்து எவ்வளவுநேரம் ஆயிற்று? எங்கே, அவளுக்கும் கதை எழுதக் கற்றுக்கொடுத்து அவளையும் உங்கள் பக்கத்திலேயே உட்காரவைத்துக்கொண்டீர்களோ என்று பார்த்தேன்" என்று கூறிவிட்டு "நீ வாம்மா, அல்லி...! அடுப்பில் வேலை இருக்கிறது..." என்று என்னை அவர்களுடன் அழைத்துக்கொண்டு போனார்கள்.

இந்த சம்பவத்திற்குப்பிறகு முன்பெல்லாம்போலக் கூச்சமில்லாமல் சந்தித்துக்கொண்ட என் கண்களும் அத்தானுடைய கண்களும் காதலுடன் பேசிக்கொள்ள ஆரம்பித்தன.

நான் என் இதயத்தையே அவரிடம் ஒப்படைத்து விட்டேன். என்னுடைய இந்தப் போட்டியால் அருமை அக்கா கௌரியின் மனம் எந்த அளவுக்கு வேதனைப் படும் என்பதும் எனக்கு ஓரளவு தெரியும். ஆனால் அதனாலோ...அல்லது திருமணம் ஆன அவரைக் காதலிப்பது தவறு என்பதாலோ நான் அவரைக் காதலிப்பதை மாற்றிக்கொள்ள முடியவில்லை. அப்படி மாற்றிக்கொள்ளவும் நான் விரும்பவில்லை. இனி, வாழ்ந்தால் அவருடன் தான் வாழ்க்கை...அது நிறைவேறுமற்போனால் கடைசி வரை கன்னி வாழ்க்கை என்ற அசைக்கமுடியாத முடிவுக்கு வந்துவிட்டேன்.

நாட்கள் சில சென்றன.

பழையபடி, நான் பெரும்பாலும் நாள் முழுவதையும் அவர்கள் வீட்டிலேயே கழித்தேன்.

நானும் அவரும் ஒட்டியும் ஒட்டாமலும் எச்சரிக்கையுடன் பழகுவதை அக்கா கண்டும் காணாமலும் இருந்தார்கள். அவர்கள் எங்கள் அன்புப் பிணைப்பைக் கண்டிக்கிறார்களா...ஆதரிக்கிறார்களா என்பதை நான் எவ்வளவோ முயன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவர்கள் எதிரில் இல்லாதபோது நானும் அவரும் சேர்ந்து எவ்வளவு பெரிய தவறுசெய்து அவர்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டாலும் அது என் மனத்தை அவ்வளவாகப் பாதிக்கவில்லை; ஆனால் அவர்கள் எதிரில் இருக்கும்போது 'அவரிடம் சற்று நெருங்கிப் பேசினால் போதும் என் நெஞ்சில் 'சுருக்'கென்று ஏதோ ஒன்று உறுத்தும்!

இப்போது அவர், அக்காவைப் புறக்கணித்துவிடவில்லை என்றாலும் அவர்கள் எதிரிலேயே என்னிடம் அவர் அளவுகடந்த அன்பு செலுத்தவும் உரிமை கொண்டாடவும் ஆரம்பித்துவிட்டார். அவர், அக்கா எதிரில் என்னிடம் அளவுக்குமீறிய பரிவுடனும் உரிமையுடனும் நெருங்கிப் பழகும்போது எனக்கு மிகவும் சங்கடமாக இருக்கும்.

எழுத்தாளர்களும் கலைஞர்களும் சபல சித்தம் உடையவர்கள் என்கிறார்களே......அதற்கு ஓர் உதாரணமாக ஆகிவிட்டார் அவர்!

அவர் என்னை விரும்பவேண்டும் என்று நான் விரும்பினாலும் பிறர் அறியும்வண்ணம் அவர் என்னை அதிகமாக விரும்புமபோது என்னுள் நாணமும் அச்சமும் எழுந்து என்னை அலைக்கழிக்கின்றன.

நாள் ஆக ஆக அவர் என்னிடம் அதிக அன்பு செலுத்துவதைப் போலவும் அக்காளிடம் அன்பு குறைந்து நடப்பதைப் போலவும் எனக்குத் தோன்றியது.

என்னிடம் அதிக அன்பு செலுத்துவதால் அக்காளிடம் இருந்த இவர் அன்பு குறைந்துவிட்டதா? அல்லது, அன்றைய சினிமா கொட்டகைப் பேச்சால் அக்காவிடம் அன்பு குறைந்து வருவதால் என்னிடம் அதிக அன்பு செலுத்துகிறாரா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை?

✻

கௌரி:

என்னால் நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறது. அவருக்கு என்மேல் இருக்கும் அன்பு குறைந்துவிடவும் இல்லை; அல்லியின்மீது கொண்ட அன்பு என்னுடையதைவிட அதிகமாகிவிடவும் இல்லை. எனினும், ஒரே சமயத்தில் எங்கள் இரண்டு பேரிடமும் அன்பைப் பொழிய ஆவல் கொள்கிறார். அவ்வளவே...! ஆனால் ....

ஒன்றுமட்டும் உண்மை. அவர், அழகுத் தேவதையாக விளங்கும் அல்லியின் எழில் நலனில் அளவு கடந்த கவர்ச்சிப்பட்டிருக்கிறார். அதனால் அல்லியிடம் அதிக அன்பு செலுத்துகிறார். அதிகமாக அவளிடம் நெருங்கியிருக்க முயலகிறார். அப்படி அன்பு கொள்வதற்குக் கருவாக அமைந்தது, சினிமாவில் அந்த இளம் தம்பதிகள் பேசிக்கொண்ட நாராசப் பேச்சாகத்தான் இருக்கவேண்டும் என்று நான் நினைக்கிறேன்,

அந்தப் பேச்சில் உண்மை இல்லாமலும் இல்லை. எவ்வளவு கசப்பான காரமாக இருந்தாலும் உண்மை உண்மைதானே?

கொட்டகையில் இடைவேளையின்போது விளக்கு போட்டார்கள். எங்களுக்குப் பின்வரிசையிலிருந்த ஒரு வாலிபன், தன் இளம் மனைவியிடம் "இதோ......எதிரில் ஜிப்பா போட்டுக்கொண்டு அமர்ந்திருக்கிறாரே...அவர் தான், எழுத்தாளர் கதிரவன். அருகில் இருப்பது

அவர் மனைவி...அதுவும் நம்மைப்போல காதல் திருமணம்தான்'' என்ருன்.

"அப்படியா? அவரைப் போலவே அவர்மனைவியும் தங்கச்சிலை மாதிரி அதிக அழகாக இருக்கிருர்களே. இதைப்போல அழகான ஜோடிப் பொருத்தம் அமைவது மிகவும் அபூர்வம்'' என்ருள், அவள்.

அவன் இடைமறித்து, "நீ யாரைச் சொல்கிருய்? அது அவர்களுக்குத் தெரிந்த கல்லூரிப் பெண். இதோ இந்தண்டை இருக்கிருர்களே கருப்பாக மெலிந்து... அவர்கள்தான் அவர் மனைவி...'' என்ருன்.

அவள் ஏதோ விபத்தைக் கண்டவளைப்போல, "என்ன இவர்களா? அவருடைய அழகுக்கும் கம்பீரத்துக்கும் இவர்கள் எந்த மூலை...? பார்ப்பதற்கு ஒரு மாதிரியாகக் கருப்பாக இருக்கிருர்களே......இவர்களை எப்படித் தம் மனைவி என்று சொல்லிக்கொண்டு அவர் வெளியில் அழைத்து வருகிருரோ...தெரியவில்லையே? இருந்தாலும் அந்த அம்மாள் நிரம்ப கெட்டிக்காரிதான். அழகும் திறமையும் நிறைந்த அவரை ஏமாற்றி எப்படியோ தம் வலையில் சிக்கவைத்துத் திருமணம் செய்து கொண்டிருக்கிருர்கள்...'' என்ருள்.

அவள் கூறிய அந்தச் சொற்களைக்கேட்டு நான் கூனிக் குறுகிப் போனேன். என் நெஞ்சமே வெடித்துவிடும் போல் இருந்தது.

அவள் கணவன் மேலும், "அவர் பக்கத்தில் இருக்கும் அந்த அழகிய கல்லூரிப் பெண்ணைக் கூட அவரே கட்டிக்கொள்ளப் போவதாக ஊரில் பேசிக் கொள்கிருர்கள் ....'' என்ருன்.

அதற்குள் இடைவேளை முடிந்து கொட்டகையில் விளக்குகள் அணைந்தன. ஒளி நிறைந்த என் வாழ்வின் விளக்கும் அணைந்து போனதாக ஓர் பிரமை தோன்றி என்னைக் குமுறவைத்து விட்டது.

அந்தப் பெண் சொன்ன பிறகு என் நிறத்தையும் அழகையும், அவர் நிறத்துடனும் அழகுடனும் ஒப்பிட்டுப் பார்த்தேன். அவள் கூறியது முற்றும் உண்மையே! அவர் ஓர் திறமையான கணவர் என்ருல் நான் ஓர் அதிதிறமையான மனைவியாக மட்டும் இருந்தேனே தவிர, அவர் ஓர் அழகான கம்பீரமான கணவர் என்ருல் நான் ஓர் அழகான கவர்ச்சியான மனைவியாக இல்லைதான்!

இரண்டாந்தாரமாக அவர் அல்லியைத் திருமணம் செய்துகொள்ளப் போவதாக அவன் கூறியதைக் கேட்டு அவரும் அல்லியும் வருத்தப்படுவார்களே என்று நான் முதலில் எண்ணினேன்.

ஆனுல், நடைமுறையில் பார்த்தபோது அவர்கள் அதற்காகக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. மாருக, அந்தக் குற்றச்சாட்டை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்கள் என்றுகூட சொல்லலாம்.

அதன் பிறகு, அவரும் அல்லியும் எனக்குத் தெரியாமல் எவ்வளவோ எச்சரிக்கையுடன் நடந்துகொண்டார்கள். என்ருலும், அது அவர்கள் தாழம்பூவை மறைத்துவந்த கதையாகிவிட்டது.

அவர்கள் மனநிலையை இன்னும் தெளிவாகத் தெரிந்துகொள்ள விரும்பினேன். ஒருநாள், அவருக்குப் பிடித்த பஞ்சாபி உடையுடன் இருந்த எழிலரசியான அல்லியிடம் காபி கொடுத்து அவர் அறைக்கு அனுப்பி வைத்தேன். சற்றுநேரம் கழித்து நான் எதற்காகவோ அவளை அழைத்துவர அறைக்குள் நுழைந்தால்...... அவர்கள் இருவரும் அங்கே அணைப்பின் சுகத்தில் மெய்ம்மறந்து நின்றிருந்தார்கள். நான் குரல் கொடுத்துக்கொண்டே சென்றதும் அவர்கள் விலகிக்கொண்டார்கள். நான் அல்லியை என்னுடன் அழைத்து வந்துவிட்டேன்.

நான் பேசாமல் இருக்க இருக்க நாளடைவில் அவர்கள் இருவருடைய அன்பும் காதலாக மாறி அளவு கடந்துபோய்க் கொண்டிருந்தது. நான் அதைத் தெரிந்துகொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை.

அல்லி, அவருக்காக எல்லாவற்றையும் துறந்து வாழ்வையே தியாகம் செய்யத் தயாராகிவிட்டாள். அவரைத் திருமணம் செய்துகொள்ள அல்லது அவரோடு சேர்ந்து வாழ ஒருவித வெறிகூட கொண்டிருந்தாள்.

பெண்ணை பேதை என்பார்கள். ஒரு பெண் தன் மனத்தில் ஒருவனுக்கு இடம் கொடுத்துவிட்டால் பல தொல்லைகளை எண்ணி எப்படி அந்தக் காதலை மறந்து விட முடியும்? அப்படி மறந்தால் அது உண்மைக் காதலாக இருக்க முடியுமா?

ஆகவே, அல்லியை இனி எந்தச் செயலாலும் புண்படுத்தக்கூடாது என்ற எண்ணத்தால் அவளை ஒன்றும் சொல்லாமல் மிகவும் அன்போடு நடத்தி வந்தேன். ஆனுல்......

நான் எப்படி என் கணவரை அவளுக்குத் தர முடியும்? எந்தப் பெண்தான் அன்பு என்றும் நட்பு என்றும் சொல்லிக்கொண்டு தன் சிநேகிதிக்குத் தன் கணவனைக் கொடுத்துவிடுவாள்...? ஒருத்தி நாகரிகத்தின் பேரால் நல்ல எண்ணத்தோடு தன் சிநேகிதியிடம் தன் கணவனைப் பழகுவதற்குத்தான் விடமுடியும்...... அவளோடு சேர்ந்து வாழ்வதற்கு எப்படி விட்டுக் கொடுத்துவிட முடியும்?

என் கணவருக்கு இந்தக் கருத்தை நான் எப்படி எடுத்துக் கூறுவது? 'அல்லியிடம் நீங்கள் பழகாதீர்கள்...அது எனக்குப் பிடிக்கவில்லை' என்று கூறினுல் அவர் உள்ளம் உடைந்துபோகும். சந்தேகமே இல்லை. அவர் மிகுந்த உணர்ச்சி வயப்பட்டவர். மனம் உடைந்து தீய பழக்க வழக்கங்களுக்கு உள்ளாகி உடலையும் உள்ளத்தையும் கெடுத்துக்கொண்டாலும் கெடுத்துக்கொள்வார் என்று அதிகமாகஅஞ்சுகிறேன். பிறகு, கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாகி விடும். ஆகவே, அவர் மனம் புண்படாமல் என் கருத்தைத் தெரிவிக்கும் ஒரு வழியைக் கையாண்டேன்.

ஓர் நாள் இரவு......

அவர் முற்றத்தில் கட்டில் போட்டு நிலா வெளிச்சத்தில் படுத்துக்கொண்டு வானவீதியில் பவனி வரும் நிலவைப் பார்த்துக்கொண்டிருந்தார். நான் வீட்டு வேலைகளை முடித்துவிட்டுப் பால் குவளையுடன் கட்டிலுக்குச் சென்றேன்.

அவர் என் கையைப் பற்றி இழுத்துத் தம்முடன் கட்டிலில் என்னை உட்காரவைத்தார். நான் அமைதி

யாக அவரிடம் பால் குவளையை நீட்டினேன். அதை வாங்கி பாதி குடித்த அவர் என்னை அணைத்தவண்ணம் மீதி பாலைக் குவளையோடு என் வாயருகே கொண்டு வந்து அவராகவே என்னைக் குடிக்கவைத்தார்.

அவருடைய ஒப்பற்ற அந்த அன்பை எண்ணிய போது அவர் எத்தகைய தவறுகளைச் செய்தாலும் மனமார அனுமதி தந்துவிடலாம்போல் என் மனம் நெகிழ்ப்தது.

நான் என் திட்டத்தை அவரிடம் கூறினேன். அவர் ஆச்சரியத்தால் அப்படியே பிரமித்துப் போனார்.

"உண்மையாகவா...? உண்மையாகவா, கௌரி!" என்று ஓராயிரம் தடவை கேட்டார்.

'உண்மையில்லை......உள்ளத்திலிருந்து அந்தச் சொற்கள் வரவில்லை' என்று கூறிவிட என் மனம் துடித்தாலும், "ஆமாம், அத்தான்! உண்மைதான் அத்தான்...!" என்றது என் வாய்.

"கௌரி! நீ என் மனைவி மட்டும் அல்ல'டி. நீ என் தெய்வமும்கூட! யாருமே...உலகத்தில் உள்ள எந்தப் பெண்ணுமே செய்யத தயங்கும் ஒரு காரியத்தைச் செய்ய நீ முன் வந்திருக்கிறாய். உன் அன்பு நெஞ்சத்தைப் போற்றுவதற்கு வார்த்தைகளே இல்லை, கௌரி......!" என்று இரவு முழுவதும் என்னைப் பாராட்டி வானளாவப் புகழ்ந்தார்.

✻

கதிரவன்:

ஆம். என் அன்பு மனைவி கௌரியைப் போற்றிப் புகழ்வதற்கு வார்த்தைகளே இல்லை. உலகில் எந்தப் பெண்ணும் செய்வதற்குக் கற்பனையிலும் விரும்பாத ஒரு காரியத்தைச் செய்ய அவள் மனமுவந்து முன்வந்தாள்.

முதலில் அவள் வேடிக்கைக்குச் சொல்கிறாளோ என்று நானும் சந்தேகப்பட்டு திருப்பித் திருப்பிக் கேட்டேன்.

"இல்லவே இல்லை; உண்மைதான், அத்தான்..!" என்றாள் அவள். அவளை எப்படிப் புகழ்வது என்றே தெரியாமல் தவித்துப் போனேன்.

சென்னையில் என் ஆருயிர் நண்பர் முகன் இருந்தார். அவர் சிறந்த ஓவியர். என் கதைப் புத்தகம் ஒன்றை வெளியிடுவது சம்பந்தமாக அட்டைப் படம் வரைந்து வர அவரிடம் சென்றேன்,

அவர், ஒழுக்கம் அறிவு வாழ்க்கைஅனுபவம் முதலிய எல்லாவற்றிலும் என்னைவிட மிகவும் பெரியவர்.

அவரிடம் கௌரியின் விருப்பத்தைத் தெரிவித்து அவர் கருத்தைத் தெரிந்துகொள்ள விரும்பி அவரைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றேன். தயங்கித் தயங்கி கௌரி அன்றிரவு என்னிடம் கூறியதையும் நான் அதற்கு உடன்பட்டதையும் அவரிடம் சொன்னேன்.

மிகவும் பொறுமைசாலியான அவரே இதைக் கேள்வியுற்றதும் முதலில் அதிர்ந்துபோனார். சற்றுநேரம் அமைதியாகக் கடலைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு 'கௌரியின் உள்ளத்திலிருந்து வந்த சொற்கள் அல்ல, இவை' ஏதோ ஒன்றை மறைமுகமாக உங்களுக்கு உணர்த்தவே அப்படிச் சொல்லியிருக்க வேண்டும். அவர்கள் கூறியதை நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள்" என்றார்.

"இல்லை. என் மனைவியின் குணம் எனக்குத் தெரியாதா? அது நடக்கிறதா இல்லையா என்று நீங்களே பாருங்கள்" என்று நான் அவருக்குச் சவால் விட்டேன்.

மறுநாள்...

நான் வீட்டுக்குத் திரும்பியபோது அல்லியை அலங்கரித்து அவள் நெற்றியில் குங்குமப்பொட்டு இட்டுக் கொண்டிருந்தாள், கௌரி.

முன்பு கௌரி என்னிடம் சொல்லிருந்த இனிப்புச் செய்தியை அல்லியிடம் சொல்ல என் உள்ளம் துடித்தது.

"அல்லியைக் கொஞ்சம் என் அறைக்கு அனுப்பிவை கௌரி" என்று கூறிவிட்டு என் தனி அறைக்கு வந்தேன். சிறிது நேரத்தில் அழகே ஓர் உருவாய் அல்லி என் அறைக்கு வந்தாள்.

"உனக்குத் தெரியுமா, அல்லி! அக்கா நேற்றிரவு ஒரு நற்செய்தி சொன்னாள்" என்றேன்.

"என்ன, அத்தான்!" என்று என்னைக் கண்களால் விழுங்கினாள் அல்லி.

அவளை என் அருகே இழுத்து அணைத்துக் காதில் இரகசியமாக "உன்னை விரைவில் திருமணம் செய்து கொள்ளும்படி கூறினாள்..." என்றேன்.

"அப்படியா? அப்படியா சொன்னார்கள்? அவர்கள் பெண் அல்ல, அத்தான்! தெய்வம்...தெய்வத்தின் தெய்வம்" என்று ஆனந்தக்கண்ணீர் சிந்தினாள், அவள்.

அதன் பிறகு என்னை நிமிர்ந்து நோக்கவே வெட்கப்பட்டுகொண்டு வீட்டிற்கு ஓடிவிட்டாள்; கௌரியையும் அவள் பார்க்கவில்லை.

ஒரே வாரத்தில் அல்லியைப் பதிவுத் திருமணம் செய்துகொள்வதற்கான எல்லா வேலைகளையும் முடித்து விட்டேன். தனக்குத் தடையேதும் இல்லையென்று கௌரியும் எழுதிக் கொடுத்துவிட்டாள். அல்லியின் தந்தையும் சம்மதித்தார். அல்லியோ வேளைக்கு ஒருவிதமாகத் தன்னை அலங்கரித்துக்கொண்டு குதூகலம் பொங்கும் இதயத்துடன் 'அக்கா.. அக்கா' என்று இரவுபகலாக கௌரியையே சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருந்தாள்.

அன்று மணப்பதிவு நாள்...

திருமணப்பதிவு அலுவலகத்திற்குச் செல்வதற்கு முன்பு அல்லியை ஒரு எழில் ராணியாக அலங்கரித்தாள் கௌரி! தூய வெள்ளைநிற வேட்டியும், சந்தனநிற ஜிப்பாவும் அணிந்துகொள்ளும்படி கௌரி சொல்லவே நானும் அவற்றை அணிந்துகொண்டேன்.

நானும் அல்லியும் புறப்படத் தயாராக கூடத்தில் வந்து அமர்ந்தோம். அல்லி புதுமணப் பெண்ணுக்குரிய நாணத்துடன் தலைகவிழ்ந்து அமர்ந்திருந்தாள், மேசை மீது இரண்டு பெரிய ரோஜா மணமாலைகள் சிரித்துக் கொண்டிருந்தன.

"இதோ வந்துவிட்டேன்..." என்று பூசை அறைக்குள் நுழைந்த கௌரி நெடுநேரம் ஆகியும் வராமற் போகவே நான் திகிலுடன் அறைக்குள் சென்றேன்.

அங்கே...

பெரிதாக மாட்டப்பட்டிருந்த என் படத்தின் முன்பு மண்டியிட்டு கண்களில் நீர் ஆறாகப் பெருக கௌரி வாய் விட்டு அரற்றிக் கொண்டிருந்தாள்:

"அத்தான்! என்னுடைய இரங்கத்தக்க நிலையை உங்களால் உணர முடியவில்லையா? என் வேதனைக்கு எல்லையே இல்லையா? வேறொரு பெண்ணைக் கண்ணெடுத்தும் பாராத நீங்கள் எப்படியோ மனம் மாறிவிட்டீர்கள். உங்களால் அல்லியின் வாழ்க்கை பாழாகிவிடுமோ என்ற அச்சத்தாலும் உங்களுடைய எண்ணத்தை நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தாலும், 'நீங்கள் அல்லியை மணந்துகொள்ளுங்கள்' என்று உங்களிடம் சொல்லிப் பார்த்தேன். நான் எவ்வளவு வேதனைக்கிடையில் அப்படிச் சொன்னேன் என்பதை நீங்கள்

புரிந்துகொள்ளவே இல்லையே! நீங்கள் அல்லியிடம் காட்டும் அன்பை எதிர்த்தால் உங்கள் மனம் புண் படுமோ என்று பயந்தேன். உங்களுக்கு உடன்பாடட முறையாகக் கூறினால் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து நீங்களும் திருந்தி, அல்லியையும் திருத்தி நல்வழிப்படுத்து வீர்கள் என்ற எண்ணத்தால் அப்படிச் சொன்னேன். ஆனால் நீங்களோ நான் சொன்னதை ஆராயாது உண்மையென்று நம்பி திருமணத்திற்கு ஏற்பாடு செய்து விட்டீர்களே...அந்த சமயத்தில் நான் திடீரென்று எதிர்ப்பு தெரிவித்தால் உங்கள் மனம் ஏமாற்றத்தால் நைந்துவிடுமோ என்று பயந்து என்ன நடந்தாலும் நடக் கட்டும் என்று இதுவரை என் மனத்தை அடக்கி வைத் திருந்தேன்.

"அத்தான்! நீங்கள் நல்லவர். நான்தான் உங்களை எப்படி என் இதயத்திற்குள் வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்று தெரியாமல் அல்லியிடம் நெருங்கிப் பழக விட்டுவிட்டுத் தவறு செய்தேன். அல்லியும் நல்ல பெண். நான் மனப்பூர்வமாக உங்களை அவளுக்குத் தருவதாகவே அவள் நம்பிக்கொண்டிருக்கிறாள். இப் போது நான் இப்படிக் கலங்குகிறேன் என்பது தெரிந் தால் அவளும் துன்பப்பட்டு உள்ளம் உடைந்துவிடுவாள்

"அத்தான்...! எனக்குக் கடினமான இதயத்தைக் கொடுங்கள். ஆழ்ந்து சிந்தியாமல் நானே எனக்கு வித் திட்டுகொண்ட இந்தக் கொடுமையைத் தாங்கிக் கொள்ளும் இரும்பு நெஞ்சத்தைக் கொடுங்கள்! உங்கள் அழகுககு ஏற்ற அழகியாக நான் இல்லையென்பதையும்... அழகிலும் கம்பீரத் தோற்றத்திலும் அல்லி உங்களுக்கு ஏற்ற பேரழகிதான் என்பதையும நான் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன். அதற்காக, அல்லி உங்கள் மார் பில் தவழவும் மடியில் படுத்து இன்பம் துய்க்கவும் நான் எப்படி விட்டுக் கொடுப்பேன்? இந்த உலகத்தில் எனக் குக் கிடைத்த, கிடைத்தற்கரிய பேரின்பத்தின் ஒரு பாதியை வேறொருத்திக்கு எப்படிப் பங்கு போட்டுக் கொடுப்பேன்? அய்யோ...எப்படி எப்படி நினைத்தாலும் எத்தனை எத்தனைக் காரண காரியங்களை நினைத்தாலும் என் உடைமையை....என் ஒருத்திக்கே உரிமையான உங்களை...என் உயிருக்கு உயிரான உங்களை அவளுக்குக் கொடுக்க என் மனம் சம்மதிககவில்லையே...! முளையி லேயே உங்கள் இருவருடைய நட்பையும் கிள்ளி யெறியா மல், நான் இதுவரை என் இதயக் குமுறலையும் கொந் தளிப்பையும எப்படியோ அடக்கிக்கொண்டு ஒவ்வொரு காரியத்தையும் செய்துவந்தேன். ஆனால் அத்தான்... இந்தக் கடைசி நேரத்தில் என் மனக் குமுறலை அடககிக் கொள்ள முடியவில்லையே...என் நெஞ்சு வெடித்துவிடும் போல் இருக்கிறதே...!"

கௌரி மேலும் பேச முடியாமல் துக்கம் தொண் டையை அடைக்க நெஞ்சை அழுத்திப் பிடித்துக்கொண் டாள்.

அவள் பேச்சைக் கேட்கக் கேட்க எனக்கு உலகமே தலைகிழாகச் சுற்றியது. எவ்வளவோ புத்தகங்களைப் படித்திருந்தும் எத்தனையோ மனோதத்துவக் கதைகளை எழுதியிருந்தும் அல்லியின்மீது எனககுத் திடீரென்று ஏற்பட்ட அன்பு மயக்கத்தின் வேகத்தால், என் மனைவி யின்...ஒரு பெண்ணின் ஆழ் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாமல் நான் சலனமுற்றதற்குப் பெரிதும் வருந் தினேன். என் பிழைகள் அத்தனையையும் உணர்ந்தேன். என் மனைவியின் உள்ளத்தழகும் பெருந்தன்மையும் எனக் குப் புரிந்தது! அவளுடைய மனப்பண்பு எவ்வளவு நாக ரிகத்துடனும், மனிதத் தன்மையுடனும் பாங்குடனும் செயல்பட்டு வந்தது என்பதும் தெரிந்தது. கலங்கிய என் நெஞ்சம் தெளிந்தது.

"கௌரி! என் உயிர் நீ.. நான் மயக்கம் தெளிந்து விட்டேன். உன் அகத்தின் ஒப்பற்ற அழகைப் புரிந்து கொண்டேன். இனிமேல் நீயே பார்த்து என்னை யாருக் காவது கொடுக்கச் சம்மதித்தாலும் நான் என்னை உனக் குத் தவிர வேறு யாருக்கும் கொடுக்கமாட்டேன். கௌரி! என் மனம் புண்படக்கூடாது என்பதற்காக நீ எவ்வளவு தூரம் இதயம் குமுறியிருக்கிறாயடி...," என்று கூறிக் கொண்டே ஓடிச் சென்று அவளை அணைத்துக் கொண்டேன்.

சொல்லால் விவரிக்க முடியாத ஓர் உன்னதமான அமைதி அந்த அறையில் குடிகொண்டது.

எங்களுக்குத் தெரியாமல் அதுவரை, எங்கள் இருவ ரின் பேச்சையும் கேட்டுக்கொண்டிருந்த அல்லி மனம் அதிர்ந்துபோனாள். திருமணத்திற்காக வைத்திருந்த இரண்டு பெரிய ரோஜா மாலைகளையும் கொண்டுவந்து, என்னையும் கௌரியையும் அருகருகே நிற்கவைத்து அவற்றை எங்கள் இருவருடைய கழுத்திலும் போட்டு விட்டு அமைதியாக எங்களை மண்டியிட்டு வணங்கினாள்.

உள்ளத்தில் விழுந்த பலமான அடியைத் தாங்க முடியாமல் மனம் நொந்துபோன அவள் இதயத்தி லிருந்து ஒரு சொல்கூட வெளியே வரவில்லை.

இதயத்திலிருந்து பொங்கி கண்களில் நிறைந்து கன்னங்களில் வழிந்த இரத்தக் கண்ணீரைத் துடைக்க வும் விரும்பாதவளாய் எழுந்து நின்று, ஏக்கம் நிறைந்த கண்களால் எங்களை ஒருதடவை பார்த்துவிட்டு அமைதி யாக அறையைவிட்டு வெளியே சென்றாள்!

அனல் காற்றில் சிக்கி வாடி வதங்கிச் சோர்ந்து போன ஓர் அழகிய பெரிய ரோஜாப்பூ, தானாகவே அசைந்து அசைந்து வந்து எங்கள் கால்களில் விழுந்து வணங்கிவிட்டுச் சென்றதுபோலிருந்தது, அது!

ஆம்...காலை இளங்குளிரில் பனித்துளிகள் படிய இதழ்கள் மலர்ந்து சிரிக்கும் மலர், தன் இதழ்களையும் மகரந்தத்தையும் நறுமணத்தையும் அழித்துக்கொண்டு ஒருசில அத்தர் துளிகளாக மாறி மனத்தை மயக்கும் மணத்தை நல்குவதைப்போல....தனக்குத்தானே தன் இன்ப உணர்வுகளையும் இளமைக் கனவுகளையும் தன் உடல் உள்ளம் ஆத்மா முதலியவற்றையும் அழித்துக் கொண்டு எங்கள் வாழ்வில் மீண்டும் அன்பு மணம்கமழச் செய்துவிட்டு அந்த அழகு மலர் சோகமே ஓர் உருவாக வாடி வதங்கியவண்ணம் வெளியே சென்றாள்!

அவளுடைய கழிவிரக்க நிலையைக் கண்ட எங்கள் கண்களில் நீர் நிறைந்தது. என் கண்ணீரைக் கௌரி துடைத்தாள்; அவள் கண்களில் வழிந்த கண்ணீரை நான் துடைத்தேன்.

ஆனால்....

நடமாடும் தங்கச் சிலையாக எங்களுடன் இருந்து உண்டு உறங்கி உறவாடி எங்கள் இதயத்தில் நீங்காத இடம் பெற்றுவிட்ட அல்லி, இப்போது உள்ளம் உடைந்து துன்பத்தின் நிலைக்களமாய்...துயரத்தின் சின்னமாய் இதயம் குமுற கண்கலங்கி அழுதுகொண்டு செல்கிறாளே....அவள் கண்ணீரைத் துடைப்பது யார்?

அந்த ரோஜாமலர் விடும் துன்பக் கண்ணீரைத் துடைக்கும் யோக்கியதையையும் தகுதியையும்தான் நாங்கள் இழந்துவிட்டோமே.....

✽

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என. அண்ணாதுரை.